
52



திருச்சிராப்பள்ளி ஜில்லா

# புதிய
# பூகோள சாஸ்திரம்

T. S. முத்துக்கிருஷ்ண ஐயர், B.A., L.T.,



T. G. கோபால் பிள்ளை,
தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.

25 - [illegible]

செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட

மார்ச் மாதம் 1985 வருடம்

செப்பனிட்டு முடித்த

மே மாதம் 1985 வருடம்

April

ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்.

99105

# திருச்சிராப்பள்ளி ஜில்லா

## புதிய

# பூகோள சாஸ்திரம்


கொடுமுடி,

ஸ்ரீ சங்கர வித்தியாசாலா

ஹைஸ்கூல் தலைமை உபாத்தியாயராயிருந்த

T. S. முத்துக்கிருஷ்ண ஐயர், B. A., L. T.,

எழுதியது.


8 - OCT 1931




T. G. கோபால் பிள்ளை,

தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.

பதிப்புரிமை] 1931 [விலை அணா 5

U. 21192 N31

PRINTED AT
THE B. N. PRESS, MOUNT ROAD,
MADRAS.

3379
915.482

3-OCT 1931

# முகவுரை

வித்தியா விதிகளில் பூகோளசாஸ்திரம் கட்டாயப் பாடங்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. நான்காம் வகுப்பு மாணவர்களுக்கு இன்றியமையாமையெனப் புலப்படும் விஷயங்களே இனிய நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. பூகோள பாடத்தில் மாணவர்கள் முக்கியமாக அறியவேண்டுவன நிலத்தின் தன்மையும், இயற்கை வசதிகளும், வளமும், அவற்றிற் கேற்ப மக்களின் வாழ்க்கையும் ஆகும். அவ்விஷயங்கள் பல சிறு பாடங்களாக சுருக்கமாகவும், விளக்கமாகவும் கூறப்படுகின்றன. போக்கு வரவு சாதனங்கள், முக்கிய ஊர்கள், எல்லைகள், இயற்கையமைப்பு முதலிய பாடங்களை நடத்துகையில் உபாத்தியாயர்கள் பட விளக்கத்தால் கற்பிப்பது பயன்படத்தக்க போதனை முறையாகும்.

கல்விச்சாலைகளின் தலைமையாசிரியர்களும், கல்வித் துறையினைப்பேணும் அரசியலாரும் இப்புத்தகத்தை ஆதரித்துத் தங்கள் பள்ளிக்கூடங்களில் இதனைப் பாடமாக அமைத்து, என்னை இப்பணியில் ஊக்கமுறச் செய்யுமாறு வேண்டுகின்றனன்.

T. S. முத்துக்கிருஷ்ண ஐயர்.

# சித்திரப் படங்கள்

பக்கம்.



1. திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை முகப்புப் படம்
2. பொன்மலை ... 6
3. மேல் அணைக்கட்டு (Upper Anicut) ... 8
4. பெரிய அணைக்கட்டு (Grand Anicut) ... 8
5. கொள்ளிடம் ரெயில் பாலம் ... 34
6. காவிரி ரெயில் பாலம் ... 35
7. காவிரி பாலம் ... 35
8. ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் ... 46
9. திருச்சி நகர் ... 49
10. ஸ்ரீரங்கம் ... 55
11. திருச்சிராப்பள்ளி ஜில்லா படம் ...

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | திருச்சிராப்பள்ளி ஜில்லா ... ... | 1 |
| 2. | இயற்கை அமைப்பு ... ... | 2 |
| 3. | மலைகள் ... ... | 4 |
| 4. | ஆறுகள் ... ... | 7 |
| 5. | நீர்நிலைகள் ... ... | 13 |
| 6. | சீதோஷ்ண நிலைமை ... ... | 14 |
| 7. | மழையும், காற்றும் ... ... | 15 |
| 8. | நிலத்தின் தன்மை ... ... | 18 |
| 9. | நீர்ப்பாய்ச்சல் ... ... | 19 |
| 10. | விளைபொருள்கள் ... ... | 22 |
| 11. | காடுகள் ... ... | 24 |
| 12. | ஆடுமாடுகள் ... ... | 26 |
| 13. | பூமியிலிருந்து கிடைக்கும் பொருள்கள் ... | 27 |
| 14. | கைத்தொழில் ... ... | 28 |
| 15. | வர்த்தகம் ... ... | 31 |
| 16. | போக்கு வரவுக் கேற்ற சாதனங்கள் ... | 33 |
| 17. | ஜனங்கள் ... ... | 37 |
| 18. | ஜமீன்தார்கள் ... ... | 40 |
| 19. | ஜில்லா சரித்திரம் ... ... | 43 |
| 20. | அரசாட்சி ... ... | 45 |

21. திருச்சிராப்பள்ளி தாலூகா ... ... 48
22. குளித்தலைத் தாலூகா ... ... 60
23. கரூர் தாலூகா ... ... 63
24. முசிரி தாலூகா ... ... 67
25. லால்குடி தாலூகா ... ... 71
26. பெரம்பலூர் தாலூகா ... ... 75
27. உடையார் பாளையம் தாலூகா ... ... 77

உ



திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை

# திருச்சிராப்பள்ளி ஜில்லா

நாம் வசிக்கும் இந்தப் பெரிய தேசத்திற்கு இந்தியா என்று பெயர். வெகுகாலத்துக்கு முன்னே பரதன் என்று பெயருள்ள ஒரு அரசன் இந்தியாவில் அரசு செலுத்தினான். ஆகையால் இந்தத் தேசத்திற்குப் பரதகண்டம் என்றும் பெயர். இப்பொழுது இந்தியாவை ஆங்கிலேயர் ஆண்டு வருகிறார்கள்.

அரசாட்சி நன்றாய் நடைபெறும் பொருட்டு அவர்கள் இந்தியாவைப் பல இராஜதானிகளாகப் பிரித்திருக்கிறார்கள். அவைகளுள் நம் சென்னை இராஜதானியும் ஒன்றாகும். இந்த இராஜதானியை நமது துரைத்தனத்தார் இருபத்தாறு பிரிவுகளாகப் பிரித்திருக்கின்றனர். அப்பிரிவுகளுக்கு ஜில்லாக்கள் என்று பெயர். அவைகளில் திருச்சிராப்பள்ளி ஜில்லா ஒன்று.

அரசாங்கத்தார் இந்த ஜில்லாவை ஏழு சிறு பகுதிகளாகப் பகுத்திருக்கின்றனர். ஒவ்வொரு பகுதிக்கும் தாலூகா என்று பெயர். அத்தாலூகாக்களாவன:—

(1) திருச்சிராப்பள்ளி (2) குளித்தலை (3) கரூர் (4) முசிறி (5) பெரம்பலூர்

(6) உடையார்பாளையம் (7) லால்குடி என்பனவாம். பல கிராமங்கள் அடங்கியது ஒரு தாலூகா எனப்படும்.

திருச்சிராப்பள்ளி ஜில்லாவைச் சுற்றி எந்தப் பக்கத்திலும் கடல் சூழ்ந்திருக்கவில்லை. ஆகையால் இது ஒரு உள்நாட்டு ஜில்லா. கிழக்கில் தஞ்சாவூர் ஜில்லாவும், தெற்கில் மதுரை ஜில்லாவும் புதுக்கோட்டை இராஜ்ஜியமும், மேற்கில் கோயம்புத்தூர் ஜில்லாவும், வடக்கில் சேலம், தென்ஆற்காடு ஜில்லாக்களும் திருச்சிராப்பள்ளி ஜில்லாவின் எல்லைகளாக அமைந்திருக்கின்றன.

---

## இயற்கை அமைப்பு

பிள்ளைகளே! நாம் பிரயாணம் செய்யும் போது, வழியில் காணப்படுகின்ற சில இடங்கள் மேட்டுப்பாங்காகவும், சில இடங்கள் பள்ளத்தாக்குகளாகவும், சில பிரதேசங்கள் சமவெளிகளாகவும் இருக்கின்றன. அதிக மேடான பிரதேசங்களில் மலைகளும் குன்றுகளும் காணப்படும். ஆறுகள் மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கி ஓடி சமவெளிப் பிரதேசங்களில் நீர்ப்பாசனத்திற்குப் பயன்படும். இவ்விதமான மேடு பள்ளங்கள் இயற்கையாக அமைகின்றன. ஆகையால் ஒரு பிரதேசத்தின் மேடு பள்ளங்கள், ஆறு

கள், மலைகள் முதலியவைகளுக்கு இயற்கையமைப்பு என்று பெயர். இயற்கையமைப்புக்கு ஏற்றவாறு சீதோஷ்ணமும், மனிதரின் வாழ்க்கையும் அமையும்; தாவரங்களும், பிராணிகளும் உற்பத்தி ஆகும்.

இந்த ஜில்லாவின் வடக்கிலும் தெற்கிலுமுள்ள இடங்கள் உயர்ந்தும், மத்தியிலுள்ள நிலம் தாழ்ந்தும் இருக்கின்றன. ஆயினும் இந்த ஜில்லாவின் பெரும்பாகம் சமவெளியே. காவிரியாறு இந்த ஜில்லாவின் நடுவே ஓடி ஜில்லாவை இரண்டு பாகங்களாகப் பிரிக்கின்றது. காவிரியாறு மேற்கிலிருந்து கிழக்கு முகமாக ஓடுவதால், நிலமும் மேற்கிலிருந்து கிழக்கே சரிவாக இருக்கிறதென்று தெரிகின்றது. இந்த ஜில்லாவின் வடபாகத்தில் உயர்ந்த மலைத்தொடர்களும், காடுகளும், தென்பாகத்தில் சிறு குன்றுகளும் இருக்கின்றன. வடபாகத்திலுள்ள மலைகள் உயரமானவை. வடக்கிலும் தெற்கிலுமுள்ள மலைகளில் பெய்யும் மழையினால் சிறு ஆறுகள் உற்பத்தியாகின்றன. அவை சமவெளிப் பிரதேசங்களில் பாய்வதால், இந்த ஜில்லா நீர்வளமும் நிலவளமும் உடையதாக இருக்கிறது.

## மலைகள்

பூமியின் மேற்பாகம் எல்லா விடங்களிலும் ஒரே விதமாக இல்லை. சில இடங்கள் உயர்ந்தும், சில இடங்கள் தாழ்ந்தும் இருக்கின்றன. பக்கத்திலுள்ள நிலத்தை விடச் சுமார் நூறு அல்லது இருநூறு அடிகள் உயர்ந்துள்ள இடத்திற்கு மேடு என்று பெயர். பெரிய மேடுகள் குன்றுகள் எனப்படும். குன்றுகளைவிட உயரமான வைகளே மலைகளாம். மலைகளிலும், அவைகளின் அடிவாரத்திலும் காடுகள் இருப்பதுண்டு. அக் காடுகளிலிருந்து மரங்களும், பலவிதமான காய் கனிகளும், தேன் முதலிய மற்றப் பொருள் களும் கிடைக்கின்றன. மேலும், அக்காடுகளில் துஷ்ட மிருகங்களும் வசிக்கின்றன. மலைகள் மேகத்தைத் தடுத்து மழையைப் பெய்விக்கின்றன. மலைகளில் பெய்யும் மழை சிறு அருவிகளாக ஓடி, ஒன்று சேர்ந்து ஆறுகளாகப் பெருகுகின்றன.

திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் அநேக குன்றுகள் இருக்கின்றன. அவைகளுக்கு மலைகள் என்ற பெயரே வழங்குகின்றன. அக் குன்றுகளின்மேல் பெரும்பாலும் கோயில்கள் காணப்படும்.

இந்த ஜில்லாவில் பச்சைமலையும் கொல்லி மலையுமே முக்கியமானவை. அவை பல சிறு மலை

களும் குன்றுகளும் தொடர்ந்து, ஜில்லாவின் வடக்கில் இருக்கின்றன. அவைகள் தென்புறமாக வரவரச் சரிந்து இருக்கின்றன.

பச்சைமலை:—இதன் பெரும்பாகம் மூசிரி, பெரம்பலூர் தாலூகாக்களிலும், சிறுபாகம் அடுத்துள்ள சேலம் ஜில்லாவிலும் பரவியிருக்கின்றது. இம்மலை தென் வடக்காகச் சுமார் இருபத்தைந்து மைல் நீளமும், கிழக்கு மேற்காகச் சுமார் ஐந்து மைல் அகலமும் வியாபித்திருக்கின்றது.

கொல்லிமலை:— பச்சைமலைக்கு மேற்கில் கொல்லிமலை இருக்கிறது. இது சேலம் ஜில்லாவைச் சேர்ந்தது. இம்மலைக்கும் பச்சைமலைக்கும் இடையிலுள்ள பள்ளத்தாக்கின் ஒருபாகம் இந்த ஜில்லாவைச் சேர்ந்திருக்கிறது. இவ்விடத்தில் தேன் மிகுதியாய் அகப்படும்.

குளித்தலை தாலூகாவில் வெள்ளிமலையும், வீரமலையும், இரத்தினகிரிமலையும், கரூர் தாலூக்காவில் அரங்கமலையும், திருச்சிராப்பள்ளி தாலூக்காவில் தாயுமானவர்மலையும், திருவெறும்பியூர் மலையும், பொன்மலையும் முக்கியமானவை.

பொன்மலை மிகச் சிறிய குன்று. திருச்சிராப்பள்ளி நகரத்துக்குத் தெற்கில் சுமார் இரண்டு மைல் தூரத்தில் இருக்கிறது. ஒருசமயம் ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் போர் நடந்தபோது, பிரஞ்சுக்காரர்கள் இந்தமலையில் தங்கியிருந்தார்கள்.

அப்பொழுது அவர்கள் பகைவருக்குப் பயந்து தங்களிடம் இருந்த பொன்நாணயங்களைக் குன்றின் அடிவாரத்தில் புதைத்து வைத்தார்கள். ஆங்கிலேயர் வெற்றியடைந்து, திடீரென்று பிரஞ்சுக்காரர்களை அங்கிருந்து துரத்தினர்கள். அப்



பொன்மலை

போது அவர்கள் அந்நாணயங்களை எடுக்காமல் போய்விட்டார்கள். பின்பு மலையைச் சுற்றி மண் வெட்டும்போது, பொன் நாணயங்கள் அகப்பட்டன. ஆகையால் இக்குன்றுக்குப் பொன்மலை என்னும் பெயர் வழங்கலாயிற்று.

இப்பொழுது பொன்மலைக் கடுத்து, தென்னிந்திய இரயில்வே கம்பெனியார் ஒரு பெரிய தொழிற்சாலையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஆகையால் பொன்மலைக்கு அடுத்துள்ள இடமெல்லாம் இப்போது ஒரு நகரமாக விளங்குகிறது. இரயில்வே


தொழிலாளர்களும், உத்தியோகஸ்தர்களும் அங்கு வசிக்கிறார்கள்.

---


## ஆறுகள்

மலைகளில் பெய்கின்ற மழை நீர் சிறு அருவிகளாக ஓடி, ஒன்று சேர்ந்து பெரிய ஆறுகளாகப் பெருகி, சமவெளிப் பிரதேசங்களில் பாய்ந்து நீர்ப் பாய்ச்சலுக்கு முக்கியமாகப் பயன்படுகின்றன. காடுகளில் பெய்யும் மழைநீர் ஒன்று சேர்ந்து சிறு ஆறுகளாகப் பெருகுவதும் உண்டு. அவ்விதம் உண்டாகும் ஆறுகள் காட்டாறுகள் எனப்படும்.

காவிரியாறு:—திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் முக்கியமான நதி காவிரியாறு. இது மேற்கே வெகு தூரத்தில் குடகு மலையில் உற்பத்தியாகிறது. காவிரியின் உற்பத்தி ஸ்தானத்திற்குத் தலைக்காவிரி என்று பெயர். அங்கு இது ஒரு சிறு வாய்க்கால்போல் தோன்றுகிறது. பின்பு சிறு ஆறுகள் பல சேரப் பெரிய நதி ஆகி, மைசூர் இராஜ்ஜியத்தில் ஓடிச் சேலம், கோயம்புத்தூர் ஜில்லாக்களின் வழியாக இந்த ஜில்லாவிற்கு வருகிறது. திருச்சிராப்பள்ளி நகரத்திற்கு மேற்கே பத்து மைல் தூரத்தில் எலமனூருக்குச் சமீபமாக முக்கொம்பு என்னும் இடத்தில், கொள்ளிடம் என்னும் ஆறு, காவிரியிலிருந்து பிரிகிறது.



மேல் அணைக்கட்டு (Upper Anicut.)



பெரிய அணைக்கட்டு (Grand Anicut.)

முக்கோம்பு என்பது காவிரியும் கொள்ளிடமும் பிரியும்போது நடுவே உள்ள நிலபாகத்தின் மேற்கு முனை. காவிரியும் கொள்ளிடமும் பிரிகிற இடத்தில் கொள்ளிடத்தின் குறுக்கே ஒருசிறந்த அணைக்கட்டு இருக்கிறது. அவ்வணைக்கட்டிற்கு மேல் அணைக் கட்டு (Upper Anicut)என்று பெயர். கொள்ளிடம் பள்ளமான தரையிலும், காவிரி மேடான தரையி லும்ஓடுகின்றன. ஆகையால்வெள்ளம்வரும்போது நீரெல்லாம் கொள்ளிடத்தில் ஓடி வீணுகாமல், அந்நீரைத் தேக்கி காவிரியில் திருப்புவதற்கு, அவ்வணைக்கட்டு பயன்படுகிறது. காவிரியில் வேண்டிய அளவுக்குமேல் வெள்ளம் வரும்போது, அதிகமான வெள்ளத்தைக் கொள்ளிடத்தில் திருப்பிவிடுவதற்கு அநுகூலமாக, அவ்வணைக் கட்டுக்குக் கதவுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

காவிரியும் கொள்ளிடமும் பிரிவதால் ஏற்படும் நடுக்கரை வரவர விசாலமாக இருக்கிறது. இந்தக் கரையில் ஸ்ரீ ரங்கம் திருவானைக்காவல் என்ற க்ஷேத் திரங்களும், பலகிராமங்களும் அமைந்திருக்கின் றன. நடுக்கரை மிகவும் செழிப்பான இடம்.

இரண்டு ஆறுகளும் சுமார் பத்தொன்பது மைல் கிழக்கே ஓடியபின், கொள்ளிடம் மறுபடி யும் காவிரியுடன் சேருவதுபோல் வெகு அருகாமை யில் வருகிறது. அவ்விடத்தில் காவிரியின் குறுக்கே ஒரு கல்லணை கட்டப்பட்டிருக்கிறது. அதற்குப்

பெரிய அணைக்கட்டு (Grand Anicut) என்று பெய அவ்வணைக்கட்டிற்குச் சிறிது மேற்புறமா உள்ளாறு என்னும் கால்வாய் வெட்டப்பட்டிரு கிறது. உள்ளாற்றினால் இரண்டு ஆறுகளும் சேர் கப்படுகின்றன. அந்தக் 'கல்லணை' யால் காவி நீரைத்தேக்கி, வேண்டிய அளவுமட்டும் காவிரியில் செல்லவிட்டு மிகுந்த நீரை உள்ளாற்றின் மூலமாக கொள்ளிடத்தில் விழும்படி செய்திருக்கிறார்கள்.

காவிரியில் ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் வெள்ளம் அதிகம். ஆனி மாதம் முதல் மார்கழி மாதம் வரையில் காவிரியில் தண்ணீர் குறையாது. தை மாதத்திலிருந்து தண்ணீர் வற்ற ஆரம்பிக்கும்.

பின்பு, தஞ்சாவூர் ஜில்லாவில் கிழக்கே செல்லச் செல்ல வேறு பல சிறு ஆறுகள் காவிரியிலிருந்து பிரிகின்றன. கடைசியில் மாயவரத்திற்குச் சமீபத் தில் காவிரிப் பட்டினம் என்ற இடத்தில் காவிரி மிகச் சிறிதாகக் குறுகி வங்காளக்குடாக்கடலில் சென்று கலக்கின்றது. காவிரியின் இரு புறங் களிலுமுள்ள விஸ்தாரமான பள்ளத்தாக்குப் பிர தேசங்கள் இவ்வாற்றின் நீர்ப்பாய்ச்சலால் நல்ல செழிப்பை அடைகின்றன.

கொள்ளிடம்:—இது காவிரியின் பெரிய கிளை நதி. ஒரு ஆற்றிலிருந்து பிரிகிற நதிக்குக் கிளைநதி என்றுபெயர். காவிரியில் அதிகமாக வருகிற வெள்ள நீரைக் கொள்ளுவதால், இதற்குக் கொள்ளிடம்

என்ற பெயர் ஏற்பட்டது. இது காவிரியை விட அகலமானது. இந்நதியும் தஞ்சாவூர் ஜில்லாவில் ஓடி, வங்காளக்குடாக் கடலில் கலக்கின்றது.

அமராவதி:—காவிரியின் பல உபநதிகளில் இது ஒன்று. ஒரு பெரிய ஆற்றுடன் கலக்கின்ற சிறு ஆற்றுக்கு உபநதி என்று பெயர். இது மேற்கே ஆனைமலையில் உற்பத்தியாகி, கோயம்புத்தூர் ஜில்லாவின் வழியாகக் கரூர் தாலூகாவில் பிரவேசித்துக் கட்டளை என்னும் ஊருக்குப் பக்கத்தில் காவிரியுடன் கலக்கின்றது. கரூர் தாலூகாவில் அமராவதியாறு நீர்ப்பாசனத்திற்கு மிகவும் உபயோகப்படுகின்றது.

ஐயாறு:—இது கொல்லிமலைக்கும், பச்சைமலைக்கும் இடையிலுள்ள பள்ளத்தாக்கில் உற்பத்தியாகி, முசிரி தாலூகாவின் வழியாக ஓடி, மேல் அணைக்கட்டிற்குச் சிறிது மேற்கே அகண்ட காவிரியுடன் கலக்கின்றது. கொள்ளிடம் பிரியும் இடத்திற்கு மேற்கே காவிரி அகலமாக இருப்பதால், அகண்டகாவிரி என்னும் பெயர் வழங்குகிறது. ஐயாற்றுக்குத் தாலகையாறு என்னும் ஒரு கிளைநதியும் உண்டு.

கரைபோட்டான் ஆறு:—இது ஒரு காலத்தில் சேர, சோழ, பாண்டிய இராஜ்ஜியங்களின் எல்லையாய் இருந்ததால், இப்பெயர் உண்டாயிற்று. கொல்லிமலையின் தென் சார்பில் பெய்கின்ற மழை

நீரால் இந்த ஆறு உற்பத்தியாகின்றது. இது சேலம் ஜில்லாவிலும், முசிரி தாலூகாவிலும் ஓடி, காவிரியில் கலக்கின்றது.

நந்தியாறு:—இது பெரம்பலூர் தாலூகாவில் உள்ள சிறு மலைகளில் பெய்யும் மழையினால் உற்பத்தியாகிறது. உற்பத்தியாகும் இடத்தில் இதைக் கொண்டைக்காரன் பள்ளம் என்று சொல்லுவார்கள். இது லால்குடி தாலூகா வழியாக ஓடிக் கொள்ளிடத்தில் கலக்கின்றது. இதன் தண்ணீரில் சுண்ணும்பு கலந்திருப்பதால் நீர்ப்பாய்ச்சலுக்கு அதிகமாக உபயோகப்படுகிறதில்லை.

மருதையாறு:—இது பச்சைமலையில் பெய்யும் மழையினால் உற்பத்தியாகி, பெரம்பலூர், உடையார்பாளையம் தாலூகாக்களில் ஓடி, கொள்ளிடத்தில் கலக்கின்றது. இதன் தண்ணீரும் பயிர்த் தொழிலுக்கு ஏற்றதல்ல.

வடவெள்ளாறு:—இது சேலம் ஜில்லாவில் பச்சைமலையில் உற்பத்தியாகி, கிழக்கு முகமாகத் திருச்சிராப்பள்ளி ஜில்லாவின் வழியாகச் சென்று கடலில் விழுகின்றது.

தென்வெள்ளாறு :— குளித்தலை தாலூகாவிற்குத் தெற்கில் மதுரை ஜில்லாவில் சிறிது தூரம் ஓடி, புதுக்கோட்டையில் பிரவேசித்து, சிவகங்கை, இராமநாதபுரம் வழியாகச் சென்று கடலில் விழுகின்றது.

## நீர் நிலைகள்

கிணறு, குளம், ஏரி முதலியவைகளுக்கு நீர்-நிலைகள் என்று பெயர். கிணறுகள் மனிதரால் வெட்டப்படுபவை. பெரிய கிணறுகள் நீர்ப்பாய்ச்சலுக்கு உபயோகப்படுகின்றன. இந்த ஜில்லாவில் சுமார் 50,000 கிணறுகள் இருக்கின்றன. ஏராள-மான கிணறுகள் முசிரி, கரூர் தாலூகாக்களில் இருக்கின்றன. பயிரிடுகிறவர்கள் கிணற்று நீரைக் 'கவலை' யாலும் ஏற்றத்தாலும் இறைத்து வயல் களுக்குப் பாய்ச்சுகிறார்கள்.

மழை பெய்யும்போது ஆங்காங்கு சேர்ந்த தண்ணீர் பள்ளமான இடத்தை நாடி, அங்கு நிலையாக நிற்கும்; அதற்குக் குளம் என்று பெயர். சில இடங்களில் குளங்கள் வெட்டப்படுவதும் உண்டு.

குளத்தைப்போல் பல மடங்கு பெரியது ஏரி. ஆற்று நீர், கால்வாய்களின் வழியாக வந்து ஏரியை நிரப்பும். சில இடங்களில் சுற்றுப் புறத்தில் பெய்யும் மழையினாலும் ஏரிகள் அமையும்.

ஏரிகளைச் சுற்றிப் பலமான கரைகள் இருக்கும். உடையார்பாளையம் தாலூகாவில் ஒரு பெரிய ஏரி இருக்கிறது. அதற்குக் கன்ற தீர்த்தம் என்று பெயர். அது சுமார் 1350 ஏக்கர் நிலங்களுக்குப் பாய்ச்சப் பயன்படுகிறது.

# சீதோஷ்ண நிலைமை

சீதம் என்றால் குளிர்ச்சி. உஷ்ணம் என்றால் சூடு. குளிர்ச்சியும் வெப்பமும் இந்த ஜில்லாவில் எந்தெந்த மாதங்களில் என்ன நிலைமையில் இருக்கின்றன என்பதைப்பற்றி இந்தப் பாடத்தில் நீங்கள் அறிவீர்கள். ஒரு நாளில் எல்லா நேரமும் ஒரே விதமான சீதோஷ்ணம் இருப்பதில்லையல்லவா?

அவ்விதமே ஒரு வருஷத்தில் ஒவ்வொரு பருவத்திலும் (காலத்திலும்) சீதோஷ்ண நிலைமை மாறுபடும். சூரிய வெப்பம், மழை, காற்று முதலியவைகளுக்குத் தக்கபடி சீதோஷ்ணம் ஏற்படும். பொதுவாக கோடைக்காலம், காற்றுக்காலம், மழைக்காலம், பனிக்காலம் என நான்கு பருவங்கள் உண்டு.

பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்கள் கோடைக்காலம். அப்பொழுது உஷ்ணம் வெகு கடுமையாக இருக்கும். ஆறுகளில் நீர்வற்றிப்போகும். ஆனி, ஆடி, ஆவணி மாதங்கள் காற்றுக்காலம். இம்மாதங்களிலும் வெய்யில் அதிகமாக இருக்கும். ஆயினும் மேல்காற்று அடிக்கத் தொடங்கியதும் உஷ்ணம் தணிய ஆரம்பிக்கும். பயிர்த்தொழில் செய்வோர் தங்கள் வேலைகளைத் தொடங்குவார்கள். ஆடிமாதத்தில் காற்று மிகவும் அதிகம். புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் மழைக்காலம்.

மார்கழி, தை, மாசி மாதங்கள் பனிக்காலம். பனிக் காலத்தில் மழைக்காலத்தைவிடக் குளிர் அதிகம். காலையில் மாஞ்செடிகளின் இலைகளின்மேல் பனித் துளிகள் இருப்பதைப் பார்க்கலாம். காலையில் சூரி யன் தோன்றியபின், பனி நீங்க ஆரம்பிக்கும்.

பொதுவாக இந்த ஜில்லா உஷ்ணப்பிரதேசம்; தேக ஆரோக்கியத்திற்கு ஏற்றது.

---

## மழையும் காற்றும்

பூமியின் மேற்பரப்பிலுள்ள கடல், ஆறு, ஏரி, குளம் முதலிய நீர்நிலைகளில் உள்ள நீர், நாள் தோறும் சூரிய வெப்பதால் ஆவியாக மாறிக் கொண்டே இருக்கின்றது. இந்த ஏராளமான நீராவி மேலே சென்று, குளிர்காற்றுபட்டு மேக மாகி நமது கண்ணுக்குத் தோன்றும்.

மேகங்கள் ஒரே இடத்தில் நிலைத்து நிற்கிற தில்லை. அவை காற்றினால் தள்ளுண்டு பல திசை களிலும் செல்லும். அப்படிச் செல்லும்போது குளிர்காற்று மேகங்களின் மீது பட்டு, அவை தண்ணீராக மாறிப் பெருந்துளிகளாகப் பூமியில் விழுகின்றன. இதைத்தான் நாம் மழை என் கிறோம்.

மலைச்சிகரங்கள் குளிர்ச்சியாய் இருக்கும். அவைகளின் மீது மேகங்கள் செல்லும்போது,

குளிர்ச்சி அடைந்து மழையாகப் பெய்யும் ஆகை யால், மலைகளிலும் மலைநாடுகளிலும் மழை மிகுதி யாகப் பெய்கின்றது.

மலைகளின் இடையில் வெளிகள் உண்டு. அவ்வெளிகளுக்குக் கணவாய்கள் என்று பெயர். கணவாய்களின் வழியாக மேகங்கள் மலைகளைக் கடந்து சென்று, மற்ற இடங்களில் மழையாகப் பெய்யும். உயர்ந்த மரங்கள் அடர்ந்த காடுகளி லும் மேகங்கள் குளிர்ச்சி அடைந்து மழையாகப் பெய்யும். ஆகையால் காடுகளிலும் மழை மிகுதி யாகப் பெய்கின்றது.

மழைபெய்வதால் ஆறுகள் பெருகுகின்றன. அதனால் பயிர்த்தொழில் விருத்தியாகிறது. கடற் கரையை அடுத்துள்ள ஊர்களிலும் மழை அதிக மாகப் பெய்யும்.

காற்று வீசும்போது ஆகாயத்தில் உள்ள மேகம் சலனம் (அசைதல்) அடையும். வெப்ப மான இடத்திலிருந்து வீசும் காற்று உஷ்ணமாக இருக்கும். இதை வறண்ட காற்று என்று சொல் லுவார்கள். குளிர்ந்த பிரதேசங்களிலிருந்தும், மலைக்காடுகளிலிருந்தும் வீசும் காற்று குளிர்ந்திருக் கும். குளிர்காற்றில் சிறு நீர்த்துளிகள் கலந் திருப்பதுண்டு. பருவங்களுக்குத் தக்கபடி காற் றும் வெவ்வேறு திக்கை நோக்கி வீசும். தெற்கி

விருந்து வீசும் காற்றுக்குத் தென்றல் என்றும், வடக்கில் இருந்து அடிக்கும் காற்றுக்கு வாடை என்றும், கிழக்கிலிருந்து வீசும் காற்றுக்குக் கீழ்க் காற்று என்றும், மேற்கிலிருந்து வீசும் காற்றுக்கு மேல் காற்று என்றும் பெயர்.

வெய்யிற் காலத்தில் கடலிலுள்ள நீர், சூரிய வெப்பத்தால் நீராவி ஆகி மேகங்களாக மாறும். அந்தப் பருவத்தில் வீசுகின்ற தென்மேற்குக் காற்று அம்மேகங்களை அடித்துக்கொண்டு வருகையில், அவைகள் மேற்குத் தொடர்ச்சி மலைகளினால் தடுக்கப்பட்டு அங்கேயே மழையாகப் பெய்யும். அந்த மழையினாலேயே காவிரி முதலிய ஆறுகளில் வெள்ளம் வருகின்றது. மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள பாலக்காட்டுக் கணவாயின் வழியாய் மேகம் உட்புகுந்து, கிழக்கில் பிரவேசித்து சில சமயங்களில் மழையாகப் பெய்யும். அதற்குக் கோடை மழை என்று பெயர். புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் வடகிழக்குக் காற்றினால் கொண்டு வரப்படும் மேகமே, இந்த ஜில்லாவிலும், அடுத்துள்ள மற்ற இடங்களிலும் மழையாகப் பெய்கின்றது; இதுவே மாரிக்கால-மழை. சில சமயம் தை மாதம் வரையில் மாரிக்-கால மழை நீடித்திருக்கும். பங்குனி மாதத்திலும் சிறிது மழை உண்டு. இந்த ஜில்லாவில் போதிய அளவு மழை பெய்வதினாலும், காவிரியாற்றின்

வெள்ளத்திலும் நீர் வசதி அமைந்து பயிர்த் தொழில் நன்றாக நடைபெறுகின்றது.

## நிலத்தின் தன்மை

நிலத்தில் உறுதியானது கல் தரை அல்லவா! கற்றரையைப் பாறை என்று சொல்லுவதும் உண்டு. உயரமான மலைகளிலும் மற்ற இடங்களிலுமுள்ள பாறைகள் சூரிய உஷ்ணத்தால் காய்ந்து சிறிது விரியும். பின்பு மழை மிகுதியாகப் பெய்யும்போது, அவை சுருங்கிப் பிளவு கொடுக்கும். அப்பிளவுக்குள் மழைநீரும் காற்றும் புகுந்து, அக்கற்கள் சிறிது சிறிதாக உடைந்து மணலாகவும் மண்ணாகவும் ஆகின்றன. சில கற்களில் சுண்ணாம்புச் சத்து கலந்திருக்கும். அக்கற்கள் மண்ணாகும்போது, பயிர்களுக்கு உதவமாட்டா. மற்ற கற்கள் களிமண்ணாகவும், செம்மண்ணாகவும் ஆகின்றன. அவை ஆறுகள் ஓடாத இடங்களில் அதிகமாகக் காணப்படும். காடுகளிலுள்ள மரங்களின் இலைகளும் வேர்களும் அழுகிப் போய் களிமண்ணுடன் கலந்து கரிசல் மண்ணாக ஆகும். கரிசல்மண்ணில் பருத்தி நன்றாக விளையும்.

ஆறுகளில் வெள்ளம் வரும்போது, அதில் மண்ணும் கரைந்து கலந்து வரும். அந்த மண் ஆங்காங்கு ஆற்றின் இருகரைகளிலும் படியும். அதற்கு வண்டல் என்று பெயர். வண்டல்மண்

காவிரி நதியை அடுத்துள்ள பிரதேசங்களில் மிகுதியாய் உண்டு. கரிசல்மண் எல்லாப் பாகங்களிலும் காணப்படும். செம்மண் மேற்குப் பாகத்தில் அதிகம்.

பொதுவாக எல்லாவிதமான மண்களும் பொருந்தி இருப்பதால், இந்த ஜில்லா நிலவளமுடையது.

---

## நீர்ப் பாய்ச்சல்

விவசாயம் நடைபெறுவதற்கு பூமியின் வளமும், நீர்வசதியும் இன்றியமையாதவை. நீங்கள் பூமியின் தன்மைகளைப்பற்றி படித்திருக்கிறீர்கள். நீர்வசதியைப்பற்றி இப்பாடத்தில் படிப்பீர்கள். மழைபெய்வதால் ஆறு, ஏரி, குளங்களில் தண்ணீர் நிரம்பும். மனிதன் தன்னுடைய முயற்சியால் அந்நீரைப் பிரயோஜனப் படுத்திக்கொள்ளவேண்டும். ஆற்றில் வெள்ளம் வரும்போது அணைக்கட்டுகளின் மூலமாய்த் தண்ணீரைத் தேக்கி ஏரி, குளங்களில் சேகரித்துக் கொள்ளவேண்டும். ஆற்று நீரைத் தேக்கி, கால்வாய்களின் வழியாக நீர்ப்பாசனத்திற்கு உபயோகப்படுத்த, முற்காலந் தொடங்கி அநேக அணைக்கட்டுகள் பல இடங்களில் இருக்கின்றன. அவ்வணைக்கட்டுகளில் முக்கியமானவை, மேல் அணைக்கட்டும், (Upper-Anicut) கல்லணையும், (Grand Anicut) கரூர்

தாலூகாவிலுள்ள பள்ளப்பாளையம் என்ற ஊருக் கருகில் அமராவதியாற்றின் குறுக்கே கட்டப் பட்டுள்ள அணைக்கட்டும், உடையார்பாளையம் தாலூகாவிலுள்ள நந்தியாற்றின் அணைக்கட்டும் ஆகும்.

மேல் அணைக்கட்டும், கல்லணையும் சுமார் 1500 வருஷங்களுக்கு முன்னே கரிகாற்சோழ அரசரால் கட்டப்பட்டன. இப்போது நமது அரசாங்கத்தார் அவைகளைப் பெரியவையாயும், உறுதியாகவும் கட்டியிருக்கிறார்கள். மேல் அணைக்கட்டிற்கு மேற் கே, அகண்டகாவிரியிலிருந்து ஐயன் வாய்க்கா லும், பெருவள வாய்க்காலும் பிரிகின்றன. இவ் வாய்க்கால்களால் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் சிறு பகுதிகளும், தஞ்சாவூர் ஜில்லாவின் சில பகுதிகளும் நீர்ப்பாய்ச்சல் பெறுகின்றன. கட்ட ளைக்குப் பக்கத்தில் காவிரியாற்றின் குறுக்கே ஒரு அணையைக் கட்டி, புதியதாக ஒரு வாய்க்கால் வெட்டப்பட்டிருக்கிறது. இவ்வாய்க்காலும், காவிரி யின் மற்றொரு பிரிவாகிய உய்யக்கொண்டான் வாய்க்காலும், விஸ்தாரமான நிலப்பிரதேசங்களுக் குப் பாய்கின்றன. பெரிய வாய்க்காலிலிருந்து பல சிறிய கிளை வாய்க்கால்கள் இடையிடையே பிரிந்து, நிலங்களுள்ள இடங்களில் செல்லும். உடையார்- பாளையம் தாலூகாவில் கொள்ளிடத்திலிருந்து சில வாய்க்கால்கள் பிரிகின்றன. இவைகளைத் தவிர,

காவிரியிலும் கொள்ளிடத்திலும் தழைகளாலும், மரக்கிளைகளாலும் குரம்புகள் கட்டி, வயல்களுக்கு நீரைப் பாய்ச்சுகிறார்கள். அணைக்கட்டுகளும், குரம்புகளும் சர்க்காருடைய பொறுப்பிலேயே இப்போது இருக்கின்றன. இவைபோலவே இன்னும் சிறு ஆறுகளில் வெள்ளம் வரும்போது, ஏரி குளங்களிலும், சிறு வாய்க்கால்களிலும் அந்நீரைத் திருப்பிச் சேகரித்துப் பயிர்த் தொழிலுக்கு உபயோகப்படுத்துகிறார்கள். ஆகையால் இந்த ஜில்லாவில் விவசாயம் நன்றாய் நடைபெறுகிறது.

ஆறுகள் ஓடாத இடங்களில் பெரிய கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன. பூமியின்மீது பெய்யும் மழைநீரெல்லாம் பூமிக்குள் இறங்கி ஆழத்தில் தங்கி நிற்கும். கிணறுகள் வெட்டும்போது ஊற்றுக்கண்களின் மூலமாய் அந்நீர் வெளிப்பட்டு நிரம்பும். ஆகவே ஆற்றின் வெள்ளத்திற்கு மழை காரணமாவதுபோல, கிணறுகளுக்கும் மழையே காரணம். கிணற்று நீர் கவலையாலும், ஏற்றத்தாலும் இறைக்கப்பட்டு நிலங்களுக்கு பாய்ச்சப்படுகிறது. இப்போது சில இடங்களில், நீராவி இயந்திரம் வைத்து நீர் இறைக்கிறார்கள்.

நீர்ப்பாய்ச்சலுக்காக அநேக சிறிய பெரிய ஏரிகள் ஜில்லா முழுமையும் உண்டு. அவைகளில் உடையார்பாளையம் தாலுகாவிலுள்ள 'கன்ற தீர்த்தம்' என்னும் ஏரி மிகவும் முக்கியமானது.

## விளை பொருள்கள்

விளைபொருள்கள் நிலத்தின் காரத்திற்குத் தக்கபடி விளையும். நன்செய்நிலத்தில் விளைவன சில; புன்செய்நிலத்தில் விளைவன சில. நன்செய்நிலத்திற்கு வேண்டிய போதெல்லாம் நீர் பாய்ச்சவேண்டும். புன்செய்நிலம் வானம் பார்க்கும் பூமி. அதற்கு மழையே ஆதாரம்.

நெல்:—நன்செய்ப் பயிர்களில் முக்கியமானது நெல். காவிரிப் பள்ளத்தாக்குகளிலும், அமராவதி வடகரையிலும், நெல் சாகுபடி அதிகமாகச் செய்யப்படுகிறது. பெரம்பலூர் தாலூகாவில் குளங்களிலிருந்து நீர்பாய்ச்சியும், உடையார்பாளையம் தாலூகாவில் மழையின் உதவியாலும் நெல் சாகுபடி சிறிது செய்யப்படுகிறது. அதிகமான நெல் திருச்சிராப்பள்ளி தாலூகாவில் விளைகிறது. வளமுள்ள நிலங்களில் இரண்டு முறை பயிரிடுவார்கள். அவை இருபோக நிலங்கள் எனப்படும். ஒரு முறை பயிர் செய்யப்படுவன ஒரு போக நிலங்கள். நெல்லில் சம்பாநெல், கார்நெல் என இரண்டு வகைப்படும். கார்நெல்லை ஆனி, ஆடி மாதங்களில் விதைத்துத், தை, மாசி மாதங்களில் அறுவடை செய்வார்கள்.

கரும்பு:—இது நன்செய்நிலத்தில் நன்றாக விளையும். ஒரு வருஷத்தில் கரும்பைப் பயிர் செய்த நிலத்தில் அடுத்த நாலைந்து வருஷங்களுக்கு நெல்லைப் பயிர் செய்வார்கள்.

வாழை:—இது இந்த ஜில்லாவில் எல்லா இடங்களிலும் காணப்படுகிறது. ஆயினும் நீர் வசதி அதிகமாக உள்ள இடங்களில் அதனை விசேஷமாகப் பயிரிடுகின்றார்கள். சில நன்செய் நிலங்களில் சில வருஷங்களில் வாழையையும் சில வருஷங்களில் நெல்லையும் மாற்றி மாற்றிப் பயிர் செய்கிறார்கள். இந்த ஜில்லாவிலிருந்து ஏராளமான வாழைக்காய்கள் வெளியூர்களுக்கு ஏற்றுமதியாகின்றன.

கொடிக்கால்:—காவிரி ஓரத்திலுள்ள நன்செய் நிலங்கள் சிலவற்றில் வெற்றிலைக் கொடிகள் பயிரிடப்படுகின்றன. அவைகளுக்குக் 'கொடிக் கால்கள்' என்று பெயர்.

புன்செய்:—கம்பு, சோளம், கேழ்வரகு, வரகு, துவரை, பயறு, உளுந்து, எள்ளு, கொட்டை முத்து, நிலக்கடலை, பருத்தி, முதலியன புன்செய்ப் பயிர்கள். இவைகள் இந்த ஜில்லாவின் எல்லாப் பாகங்களிலும் விளைகின்றன. கரூர், முசிரி தாலூகாக்களில் கம்பும், குளித்தலை, முசிரி தாலூகாக்களில் சோளமும், குளித்தலை தாலூகாவில் கொட்டை முத்தும், எள்ளும் விசேஷமாய் விளைகின்றன.

புகையிலை:—இது தோட்டப் பயிர். இதற்கு நிலவளமும் அதிக நீரும் வேண்டும். இது கரூர் தாலூகாவிலுள்ள செம்மண் நிலங்களில் பயிராகிறது.

பருத்தி:—இது கரிசல்மண்ணில் நன்றாய் விளையும்; கரிசல்மண் கறுப்பாக இருக்கும். கரூர், பெரம்பலூர், முசிரி தாலூகாக்களில் பருத்தி சாகுப்டி செய்கிறார்கள். காய்கறித் தோட்டங்கள் எல்லா இடங்களிலும் இருக்கின்றன. நீர்வசதியான இடங்களிலுள்ள தோட்டங்களில் பலவித புஷ்பச் செடிகளையும் பயிர் செய்கிறார்கள். விசாலமான தோப்புகளில் தென்னை, மா, புளி, மூங்கில் முதலிய மரங்கள் விருத்தியாகின்றன. மலைக்காடுகளில் மனிதர் காப்பு இல்லாமல் விருத்தியாகின்ற பெரிய விருக்ஷங்களும், மூலிகைகளும் உண்டு. கொல்லி மலையில் கிச்சிலிச் செடியும், அன்னாசியும், காப்பிச்செடியும் அதிகமாய் உண்டு.

---

## காடுகள்

இந்த ஜில்லாவை நீராரம்பம் என்றும் காடாரம்பம் என்றும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். நீரோடும் இடங்கள் நீராரம்பம் எனப்படும். கிணற்றுப் பாய்ச்சலுள்ள இடங்கள் காடாரம்பம் எனப்படும், இவைகளுக்கு மைதானக்காடுகள் என்றும் பெயர். காடாரம்பத்திற்கு மழையே ஆதாரம். மைதானக்காடுகளில் இடை இடையே புல்லும், சிறு மரங்களும், முட்செடிகளும் இருக்கும். இவ்விதமான காடுகள் இந்த ஜில்லாவில் எங்கும் உண்டு.

ஆறுகளின் படுகைகளிலும் காடுகள் அடர்ந்து இருக்கும். அதற்குப் படுகைக்காடுகள் என்று பெயர். காவிரி, கொள்ளிடம் முதலிய ஆறுகளின் கரைகளில் பெரிய படுகைக்காடுகள் இருக்கின்றன. அங்கு கொறுக்காய்ப்புளி, கொன்றை, வாகை முதலிய மரங்கள் அடர்ந்திருக்கும். அவை விறகுக்கு உபயோகப்படும். அமராவதி ஆற்றின் கரைகளிலுள்ள படுகைகளிலும் இம்மாதிரியான காடுகள் சில உண்டு.

மலையிலும், மலையை அடுத்தும் உள்ள காடுகள் மலைக்காடுகள். குளித்தலைத் தாலூகாவிலும், பச்சை மலையிலும் பெரிய காடுகள் இருக்கின்றன. குளித்தலைக் காடுகளில் வேம்பு, பாலை, உசிலை முதலிய மரங்களும், பச்சைமலைக் காடுகளில் வேங்கை, கோங்கு, கடுக்காய், சந்தனம் முதலிய மரங்களும் வளரும். மலைக்காடுகளில் சில இடங்களில் தேயிலை, காப்பி முதலியசெடிகளைப் பயிரிடுகிறார்கள். அங்கு துஷ்டமிருகங்களும் சஞ்சரிக்கும். பச்சை-மலையிலும், கொல்லிமலையிலுமுள்ள காடுகளில் காட்டுப்பன்றி, காடி, சிறுத்தைப்புலி முதலியனவும் இருக்கின்றன. மான், செந்நாய், ஓநாய் முதலியவை சிறிய மலைக்காடுகளிலும் காணப்படும்.

காடுகளிலிருந்து மூங்கில்கள், பலவித மரங்கள், தேன் முதலிய பொருள்கள் கிடைக்கின்றன.

ஆகையால், அரசாங்கத்தார் காடுகளில் ஒருவரும் பிரவேசித்துப் பொருள்களை எடுத்துச் செல்லாமல் இருக்கக், காவல் வைத்திருக்கிறார்கள். சர்க்கார் விதித்துள்ள கட்டணங்களைச் செலுத்தினால், அக்காடுகளில் கிடைக்கும் பொருள்களை வெளியே கொண்டு வரலாம். இம்முறையால் அரசாங்கத்தாருக்கு வருமானமும் கிடைக்கிறது.

---

## ஆடுமாடுகள்

இந்த ஜில்லா ஆடுகளுக்குப் பெயர்போனது. இங்கு செம்மறி ஆடுகளும், வெள்ளாடுகளும், குறும்பாடுகளும் விசேஷமாய் உண்டு. ஆடுகளை அதிகமாய்க் கொழும்பு, பினங்கு முதலிய வெளித் தேசங்களுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். இந்த ஜில்லாவில் ஆடுகளைப் பாலுக்காகவும், மாமிசத்திற்காகவும் வளர்க்கிறார்கள். அவைகளின் பிழுக்கைகள் நிலங்களுக்கு நல்ல எருவாகும். ஆகையால், ஆடுகளை இராக்காலங்களில் வயல்களில் பட்டிகட்டி அடைத்து வைப்பார்கள். இந்த ஜில்லாவில் மாடுகளும் விசேஷமாய் உண்டு. அவை பெரும்பாலும் வேறு ஜில்லாக்களிலிருந்து தருவிக்கப்படுகின்றன. இந்த ஜில்லாவில் வளர்க்கப்படும் மாடுகள் உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவை அல்ல; மிகக் குள்ளமானவை. எருதுகளை வண்டி இழுக்கவும், ஏர் உழவும் உபயோகிக்கிறார்கள். காங்கேயம் என்னும் இடத்தி

விருந்தும் மாடுகளைத் தருவிக்கிறார்கள். அவை கள் மிகச் சிறந்தவை. பெரம்பலூர் தாலூகா வில் மொட்டை எருதுகள் உண்டு. அவைகளுக் குக் கொம்புகள் இல்லை. சிறு கன்றுகளாய் இருக் கும்போதே கொம்பில்லாதபடி செய்து விடுகிறார் கள். மேலும், இந்த ஜில்லாவில் எருமைகளும் எருமைக்கடாக்களும் உண்டு. எருமைகள் பசுக் களைப்போலவே பால் கொடுக்கும். எருமைக்கடாக் கள் ஏர் உழ உதவும்.

---

## பூமியிலிருந்து கிடைக்கும் பொருள்கள்

இந்த ஜில்லாவில் பொன், வெள்ளி, இரும்பு முதலிய உலோகங்கள் ஒன்றும் கிடைப்பதில்லை. ஆயினும் பலவிதமான கற்கள் மாத்திரம் இங்கு ஏராளமாய் அகப்படுகின்றன. ஒருவகையான கல் லுக்குக் கருங்கல் என்று பெயர். கட்டிடங்களுக்கு இந்தக் கல்லையே அதிகமாய் உபயோகப்படுத்து கிறார்கள். கருடமங்கலம் என்னுமிடத்தில் ஒரு வகையான கருப்புச் சலவைக்கல் அகப்படுகிறது. அதைக்கொண்டு மேஜைகளுக்கு மேல்பலகை களாகவும், கட்டிடங்களுக்குக் கல் தூண்களாகவும் உபயோகிக்கிறார்கள். அரியலூருக்குச் சமீபத்தில் சுண்ணாம்புக்கல் அகப்படுகிறது. அதைச் சூளை

போட்டுச் சுட்டுச் சுண்ணும்பாக்கிக் கட்டிடம் கட்ட உபயோகிக்கிறார்கள். ரோட்டுகள் அமைப்பதற்கு உபயோகமாகும் சரளைக்கல் பெரம்பலூர் தாலூகாவிலுள்ள குன்றுகளில் அகப்படுகிறது.

இந்த ஜில்லாவில் செங்கல்லும், மண்பாண்டங்களும் செய்யக் களிமண் பலவிடங்களில் வெட்டி எடுக்கிறார்கள். அரியலூருக்கு அருகில் ஒருவகையான வெள்ளைமணல் அகப்படுகிறது. அது கண்ணாடி வளையல் செய்ய உபயோகப்படுகிறது. அதைச் சுண்ணும்போடு கலந்து கட்டிடங்களுக்கும் உபயோகிக்கிறார்கள்.

---

## கைத்தொழில்

இந்த ஜில்லாவில் பயிர்த் தொழிலுக்கு அடுத்தது நெசவுத் தொழில். முசிரி, குளித்தலை, மணல்மேடு, ஜயங்கொண்ட சோழபுரம், துறையூர், தாத்தையங்கார்பேட்டை, உடையார்பாளையம், பெரம்பலூர், கோயம்பள்ளி, கரூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் நெசவுத்தொழில் விசேஷமாக நடைபெறுகின்றது. சேணியரும், கைக்கோளரும், சாலியரும், பறையரும் இத்தொழிலைச் செய்கிறார்கள். துப்பட்டி முதலிய முரட்டுத் துணிகள் பறையர்களால் நெய்யப்படுகின்றன.

ஜயங்கொண்ட சோழபுரத்தில் சரிகை அங்கவஸ்திரங்களும், குளித்தலையில் பட்டுக்கரை

வேஷ்டிகளும் விசேஷம். கரூர் தாலூகாவிலுள்ள கோயம்பள்ளி என்னும் ஊர் புடவைகளுக்குப் பெயர் பெற்றது. கரூரில் பாதிரிமாருடைய நெசவுத் தொழிற்சாலை ஒன்று இருக்கிறது. உடையார் பாளையத்திலும், பெரம்பலூரிலும் ஜமுக்காள நெசவு அதிகம். திருச்சிராப்பள்ளியில் பட்டு நூல் நெசவும், முகமதியர் துணிகளும் விசேஷமாக நெய்யப்படுகின்றன. பெரம்பலூர் தாலூகாவிலுள்ள சில இடங்களிலும் கம்பளி நெசவு நடைபெறுகிறது. கம்பளி நெசவில் தேர்ந்தவர்கள் குறும்பர்கள்.

நெசவுத் தொழிலுக்கு இன்றியமையாத நூல் மேல்நாடுகளிலிருந்து அதிகமாக வருவிக்கப்படுகின்றது. இப்போது நமது நாட்டுப் பஞ்சைக் கொண்டு கைராட்டினத்தில் நூல் நூற்றலும் அந்நூலைக் கொண்டே துணி நெய்தலும் விருத்தியாகிக் கொண்டு வருகின்றது. ஜரிகையைப் பிராஞ்சு தேசத்திலிருந்து வருவிக்கிறார்கள். சாய நூல் மதுரையிலிருந்து வருகிறது.

துணி நெய்தலுக்கு அடுத்தபடி முக்கியமாக நடைபெறும் தொழில் கோரைப்பாய் முடைதல். அநேகஇடங்களில் இத்தொழில் நடைபெறுகிறது. பாய் முடைதலுக்கு வேண்டிய கோரைப் புல்லைப் படுகைநிலங்களில் அதிகமாகப் பயிர்செய்கிறார்கள்.

உறையூரிலும், பேட்டைவாய்த்தலையிலும், கட்டளையிலும் பாய் முடைதல் விசேஷம்.

பித்தளைப் பாத்திரங்களும், வெண்கலப் பாத்திரங்களும் சிற்சில இடங்களில் செய்யப்படுகின்றன. திருச்சிராப்பள்ளியில் சிறிதளவு பித்தளைப் பாத்திரங்களும், செப்புத் தகட்டினுல் சில பாத்திரங்களும், நெட்டி வேலையும், வெள்ளியில் சித்திர வேலையும் நடைபெறுகின்றன. திருச்சி, உறையூர், புத்தூர் ஆகிய இடங்களில் சுருட்டுச் செய்தல் ஒரு முக்கியமான தொழிலாகும். உறையூர் சுருட்டுகள் வெளிநாடுகளுக்கு அதிகமாக ஏற்றுமதி ஆகின்றன. தோலைப் பதனிடும் தோல் கிடங்குகள் சில திருச்சியில் உண்டு. சிறந்த செருப்புகள் சக்கிலியர்களால் திருச்சியில் செய்யப்படுகின்றன. உயர்ந்த தோல்கள் மேல்நாடுகளிலிருந்து வருவிக்கப்படுகின்றன.

நகைவேலை, மண்பாண்டம் வனைதல், தச்சுவேலை, சிற்பவேலை, கயிறு திரித்தல், கூடை முடைதல், எண்ணெய் ஆட்டுதல் ஆகிய அநேக தொழில்கள் எல்லா இடங்களிலும் நடைபெறுகின்றன. குறவர்கள் கயிறு திரித்தலும், கூடை முடைதலும் விசேஷமாகச் செய்கிருர்கள். சோப்புச் செய்தல் இப்போது விருத்தியாகிக் கொண்டு வருகிறது.

சில தொழில்கள் இயந்திரத்தினால் செய்யப் படுகின்றன. நெல்மிஷின்கள் திருச்சியிலும் மண்ணச்சநல்லூரிலும் அதிகம். பெரம்பலூரில் பருத்தியிலிருந்து கொட்டையை எடுக்கும் இயந் திரச்சாலைகள் இருக்கின்றன. திருச்சியில் அச்சு யந்திர சாலைகள் பல இருக்கின்றன.

பொன்மலையில் தென்னிந்திய இரயில்வே கம்பெனியாருடைய பெரிய தொழிற்சாலை (Work-Shop) ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அங்கே ரயில் வண்டிகளும் ரயிலுக்கு வேண்டிய வேறு பல சாமான்களும் செய்யப்படுகின்றன.

---

## வர்த்தகம்

நாட்டில் மிகுதியாக உள்ள விளை பொருள் களும், செய்பொருள்களும் வெளிநாட்டுக்கு அனுப்பப் படுகின்றன. உள்நாட்டில் இல்லாத பொருள்கள் வெளிநாடுகளிலிருந்து, வருவிக்கப் படுகின்றன. வெளியூர்களுக்குப் பொருள்கள் அனுப்புவதை ஏற்றுமதி யென்றும், வெளியூரிலிரு ந்து பொருள்கள் வருவிப்பதை இறக்குமதி யென் றும் சொல்லுகிறோம். சாதாரணமாக வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் இந்த ஜில்லா விலேயே கிடைக்கின்றன.

இயந்திரங்களும், கண்ணாடிச் சாமான்களும், இரும்புக்கருவிகளும், உலோகங்களும், பாத்திரங்

களும், நூலாடையும், பட்டும், மரத்துண்டுகளும், சர்க்கரையும், பாக்கும், மண்ணெண்ணெயும், உப்பும், மருந்துகளும், வாசனைத்திரவியங்களும், புகையிலையும் வெளியூர்களிலிருந்தும், வெளித்தேசங்களிலிருந்தும் நமக்குக் கிடைக்கின்றன. நெல், பருத்தி, எண்ணெய் வித்துக்கள், சுருட்டு, பாய், சமுக்காளம், வாழைக்காய், ஆடுமாடுகளின் தோல், கயிலித்துணிகள் முதலியன வெளித்தேசங்களுக்கு மிகுதியாக ஏற்றுமதி ஆகின்றன.

இந்த ஜில்லாவில் திருச்சிராப்பள்ளி, அரியலூர், கரூர் முதலிய இடங்கள் பெரிய வியாபார ஸ்தலங்களாக இருக்கின்றன. பல ஊர்களில் வாரம் ஒரு முறை சந்தை கூடும். சுற்றுக் கிராமங்களிலுள்ள ஜனங்கள், தங்களுக்கு வேண்டிய பொருள்களைச் சந்தைகளில் வாங்கிக்கொள்ளுவார்கள். சந்தை வியாபாரிகள் கிடைக்குமிடங்களில் பொருள்களை வாங்கிச் சேர்த்து, வண்டிகளில் ஏற்றிக்கொண்டு சந்தைதோறும் சென்று விற்பார்கள். மணப்பாறை, சமயபுரம், இலுப்பூர், சிறுதையூர் முதலிய இடங்களில் கூடும் சந்தைகள் மிகவும் முக்கியமானவை. அவைகளில் கால்நடைகளும் விற்பனைக்குக் கொண்டுவரப்படும். திருச்சியில் மயிலஞ் சந்தை என்பது தினந்தோறும் கூடும்.

வியாபாரத்திற்கு முக்கியமானவை போக்குவரவு சாதனங்களே. ஆகையால் கப்பி போடப்

பட்ட பெருஞ் சாலைகள் அநேகமாக எங்கும் இருக்கின்றன. நாட்டுப்புறங்களிலும், மலைகளின்மேலும் சிறு பாதைகள் இருக்கும். இப்போது இருப்புப் பாதையின் உதவியால் வியாபாரம் மிகவும் விருத்தியாகி வருகின்றது.

---

## போக்கு வரவுக்கேற்ற சாதனங்கள்

மனிதர்கள் ஒரு ஊரிலிருந்து மற்ற ஊர்களுக்குச் செல்லவும், வியாபாரப் பொருள்களைப் பல ஊர்களுக்குக் கொண்டு போவதற்கும் சரியான பாதைகள் வேண்டும். அப்பாதைகள் போக்கு வரவு சாதனங்கள் எனப்படும். இந்த ஜில்லாவில் சுமார் 1250 மைல் நீளமுள்ள சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. அவற்றில் 1000 மைல் நீளமுள்ள ரஸ்தாக்களுக்குக் கப்பி போட்டு நன்ருய் அமைத்திருக்கிருர்கள். 250 மைல் நீளமுள்ள ரஸ்தாக்கள் மண்ணினுல் அமைக்கப்பட்டிருக்கின்றன நிழல் தரும் மரங்களைச் சாலைகளின் இரு பக்கங்களிலும் பல இடங்களில் வைத்திருக்கிருர்கள். திருச்சிராப்பள்ளி நகரத்திலிருந்து பல சாலைகள் நாலாப் பக்கங்களிலும் செல்லுகின்றன. அவை:—

(1) பெரம்பலூர் வழியாகச் சென்னைக்குச் செல்வது.

(2) லால்குடி, அரியலூர், உடையார்பாளையம், ஜெயங்கொண்டசோழபுரம் முதலியவைகளின் வழியாகச் சிதம்பரத்திற்குச் செல்வது.

(3) முசிரி, நாமக்கல் வழியாகச் சேலத்திற்குச் செல்வது.


(4) துறையூர் வழியாகப் பச்சைமலை, கொல்லி மலைக்குச் செல்வது.

(5) குளித்தலை, கரூர் வழியாக ஈரோடுக்குச் செல்வது.

(6) மணப்பாறை வழியாக மதுரைக்குச் செல்வது.

(7) புதுக்கோட்டைக்குச் செல்வது.


வாராவதிகள்:—மேற்கூறிய சாலைகள் செல்லும் மார்க்கத்தில் பல ஆறுகள் குறுக்கிடுகின்றன.




கொள்ளிடம் ரெயில் பாலம்

அவற்றைத் தாண்டிச் செல்வதற்கு ஆங்காங்கு வாராவதிகளைக் கட்டி இருக்கிறார்கள். அவற்றுள் கொள்ளிடத்தின் குறுக்கே இப்பொழுது கட்டப்பட்டிருக்கும் இரும்புப்பாலம் மிகப் பெரியது

இதற்கு முன் செங்கல்லினல் கட்டப்பட்டிருந்த பாலம் 1924-ம் வருஷம் ஏற்பட்ட வெள்ளத்தில்



காவிரி ரெயில் பாலம்



காவிரி பாலம்

விழுந்து விட்டது. அதற்கடுத்த நீளமுடையது காவிரியின் குறுக்கே கட்டப்பட்டிருக்கும் இரும்

டுப்பாலம். காவிரிக்கும் முன்னே செங்கல் பாலம் கட்டப்பட்டிருந்தது. அதுவும் 1924-ம் வருஷம் ஏற்பட்ட வெள்ளத்தில் பழுதாகிவிட்டது. ஆகையால், அதை இடித்து விட்டுப் பழைய அஸ்திவாரத்தின்மேல் இப்பொழுது இரும்புப்பாலமாகக் கட்டியிருக்கிறார்கள். இவ்விரண்டு பாலங்களும் முக்கியமானவை. இவையன்றி, இன்னும் சில சிறு வாராவதிகளும் இருக்கின்றன. சில ஆறுகளை ஓடங்கள், பரிசுகள் மூலமாகவும் தாண்டிச் செல்கின்றனர்.

இருப்புப்பாதைகள்:—திருச்சியிலிருந்து எல்லாப் பக்கங்களுக்கும் இருப்புப்பாதைகள் செல்லுகின்றன.

அவை:—

(1) திருச்சியிலிருந்து தெற்கே மதுரைக்குச் செல்லுகிறது.

(2) இன்னொன்று மேற்கு நோக்கி ஈரோடுக்குச் செல்லுகிறது.

(3) மற்றொன்று புதுக்கோட்டைக்குப் போகிறது.

(4) திருச்சியிலிருந்து தஞ்சாவூர் வழியாகச் சென்னைக்குப் போகிறது.

(5) லால்குடி, அரியலூர் வழியாக விழுப்புரம் சென்று சென்னை இருப்புப்பாதையுடன் சேருகிறது.

# ஜனங்கள்

திருச்சிராப்பள்ளி ஜில்லா மிகவும் ஜன நெருக்கமுள்ளது. ஏறக்குறைய 19,00,000 ஜனங்கள் இந்த ஜில்லாவில் வசிக்கிறார்கள். மற்ற தாலூகாக்களைவிட திருச்சிராப்பள்ளி, லால்குடி தாலூகாக்களில் ஜனத்தொகை அதிகம். திருச்சிராப்பள்ளி நகரத்தில் மட்டும் சுமார் 1,20,000 பேர் வசிக்கிறார்கள். பெரும்பான்மையோர் இந்துக்கள். கிறிஸ்தவர்களும், முகம்மதியர்களும் மிகச் சிலர். சுமார் 2000 வருஷங்களுக்கு முன் ஜைனர்களும், பௌத்தர்களும் ஏராளமாக இருந்தார்கள். இப்போது சிலர்தான் இருக்கிறார்கள். ஆனால் ஜைனர்களும், பௌத்தர்களும் செய்துவைத்த விக்கிரகங்கள் ஜெயங்கொண்ட சோழபுரம், குளித்தலை, புள்ளம்பாடி முதலிய இடங்களில் காணப்படுகின்றன.

இந்துக்களில் சைவர்கள் என்றும் வைணவர்கள் என்றும் இருவகையினர்கள் வசிக்கிறார்கள். சிவபெருமானை வழிபடுபவர்கள் சைவர்கள்; விஷ்ணுவை வணங்குகிறவர்கள் வைணவர்கள். முகம்மதியர்கள் மகம்மது என்ற பெரியார் ஏற்படுத்திய இஸ்லாமிய மதத்தை அனுசரிப்பவர்கள். கிறிஸ்தவர்கள் ஏசு கிறிஸ்து என்ற பெரியார் ஏற்படுத்திய கிறிஸ்துவ மதத்தை அனுசரிப்பவர்கள். இந்துக்களில் பிராமணர்கள், வேளாளர்கள், முத்தரையர்-

கள், கள்ளர்கள், உடையார்கள், இரெட்டியார்கள் முதலிய பல பிரிவினர்கள் உண்டு.

பிராமணர்கள்:—இந்துக்களில் பிராமணர்கள் ஒரு பிரிவு. இவர்களின் தொகை மற்ற வகுப்புக் களைவிட மிகக் குறைவு. இவ்வகுப்பினரில் பெரும் பான்மையர்கள் அரசியல் உத்தியோகங்களில் அமர்ந்து ஜீவிக்கிறார்கள். இப்போது வரவர இவர்கள் வியாபாரம் முதலிய மற்றைத் தொழில் களையும் கைக்கொள்ள ஆரம்பிக்கிறார்கள். தொன்று தொட்டு இவர்கள் கல்வியில் சிறந்தவர்கள்.

வேளாளர்கள்:—வேளாண்மையில் இவர் களுக்குத் தொன்று தொட்டுப் பயிற்சி உண்டு. இவர்களில் பல பிரிவுகள் இருக்கின்றன. சோழிய வேளாளர்கள் சோழநாட்டின் பழங்குடிகள் என்று கருதப்படுகின்றனர். பாண்டி நாட்டிலிருந்து வந்த வர்கள் கார்காத்த வேளாளர்கள். கொங்கு நாட்டி லிருந்து வந்தவர்கள் கொங்கவேளாளர்கள்.

முத்தரையரும், கள்ளரும் :— பல வருஷங் களுக்குமுன் பாண்டிய நாட்டிலிருந்து வந்து இந்த ஜில்லாவில் குடியேறினவர்கள் முத்தரையர்கள். திருப்பதியிலிருந்து வந்தவர்கள் கள்ளர்கள்.

உடையார்களும், இரெட்டியார்களும்:—உடை யார்பாளையம் தாலூகாவில் உடையார்களின் தொகை அதிகம். இவர்கள் உழவுத் தொழிலில் தேர்ச்சி பெற்றவர்கள். தெலுங்கு நாட்டிலிருந்து

வந்து குடியேறினவர்கள் இரெட்டியார் வகுப்பினர்கள். இவர்களின் தொகை பெரம்பலூர் தாலூகாவில் அதிகம்.

மலையாளிகள் :— பச்சைமலை, கொல்லிமலைகளில் வசிப்பவர்கள் மலையாளிகள். இவர்கள் வேட்டையிற் சிறந்தவர்கள். இவர்கள் இந்து மதத்தையே அனுசரிப்பவர்கள். வன்னியர் என்ற ஒரு வகுப்பினர் உண்டு; இவர்கள் உழவுத் தொழிலினர். உப்பிலியர் என்பவர்கள் பழைய காலத்தில் உப்பு காய்ச்சி விற்பனை செய்து வந்தவர்கள். பள்ளர், பறையர் என்ற குலத்தினர்களும் வசிக்கிறார்கள். பறையர்களில் சிலர் துப்பட்டி முதலிய முரட்டுத் துணிகளை நெய்கிறார்கள். வண்ணார்களும் மருத்துவர்களும் ஒவ்வொரு கிராமத்திலும் உண்டு.

முகம்மதியர்கள் :—முகம்மதியர்களில் இந்துஸ்தான் பேசுகிறவர்களும், தமிழ் பேசுகிறவர்களும், தெலுங்கு பேசுபவர்களில் மிகச் சிலரும் வசிக்கிறார்கள். தமிழ் பேசுபவர்களுக்கு இலப்பைகள் இராவுத்தர்கள் என்று பெயர். இவர்கள் பெரும்பாலும் வியாபாரிகள். பஞ்சுவெட்டிகள் என்போர் தெலுங்கு பேசுபவர்கள். முகம்மதியரின் பள்ளிவாசல்களைத் திருச்சி நகரத்தில் எங்கும் காணலாம்.

கிறிஸ்துவர்கள் :—கிறிஸ்தவர்களில் ரோமன் கத்தோலிக்கர், புராடெஸ்டெண்ட் என்ற இரு வகையினர் இருக்கிறார்கள். இவர்களது மாதா-

கோவில்கள் பல இடங்களிலும் ஏற்பட்டிருக்கின்றன.

பாஷை:—இந்த ஜில்லாவின் தாய்ப் பாஷை தமிழ். எல்லோரும் தமிழ்பேசத் தெரிந்தவர்களே. இந்துஸ்தானும், தெலுங்கும் மிகச் சிலருக்கு வீட்டுப் பாஷையாக இருக்கின்றன.

---

## ஜமீன்தார்கள்

சுமார் மூந் நூறு ஆண்டுகளுக்கு முன் முகம்மதியர் இந்த ஜில்லாவில் அரசாட்சி செய்யத் தொடங்கினர்கள். அப்பொழுது இந்த ஜில்லாவின் பல பாகங்கள் பாளையக்காரர் என்னும் சிற்றரசர்களின் ஆளுகையில் இருந்தன. இந்தப் பாளையக்காரர்களுக்கும் திருச்சிராப்பள்ளி நவாப்புக்கும் அடிக்கடி போர் நிகழ்வதுண்டு. நவாப் அரசாட்சிக்குப்பின்பு ஆங்கில அரசாட்சி ஏற்பட்டபொழுது, பாளையக்காரரின் வலிமை குறைந்தது. அவர்கள் ஆங்கில அரசாட்சிக்கு அடங்கி, ஆங்கில துரைத்தனத்தார் விதித்த நில வரியைக் கொடுக்கச் சம்மதித்து ஜமீன்தார்கள் என ஆயினர். அரியலூர், உடையார்பாளையம், மருங்காபுரி, கடலூர், துறையூர், ஆண்டிப்பட்டி இவைகள் மேற்சொன்னவாறு உண்டான ஜமீன்கள் ஆகும். காட்டுப்புத்தூர் ஜமீன் ஆங்கிலேய அரசாட்சி தொடங்கியபின் ஏற்பட்டது. இது ஒரு சிறிய ஜமீன். ஆனையாங்

காட்டுப்புத்தூர் மிட்டா என்றும் சொல்லப்படும். அரியலூர், உடையார்பாளையம் ஜமீன்கள் பங்காளி கள் பிரித்துக்கொள்ளக் கூடியவைகள் அல்ல. மற்ற ஜமீன்களைப் பங்காளிகள் பிரிவினை செய்து கொண்டிருக்கிறார்கள். ஜமீன்தார்கள் தங்கள் நிலங் களுக்கு ஏற்பட்ட நிலவரியை அரசாங்கத்தாருக் குச் செலுத்துகிறார்கள். அவர்கள் கொடுக்கும் நில வரி எப்பொழுதும் மாறுதல் அடையாது. ஆனால் ஜமீன்தார்களுடைய நிலங்களைப் பயிரிடுபவர்கள் ஜமீன்தார்களுக்குச் செலுத்தவேண்டிய நிலவரி யோ அடிக்கடி மாறுதல் அடையும்.

கடவூர்:—இது குளித்தலை தாலூகாவின் தென் மேற்கிலுள்ள ஒரு ஜமீன். ஆங்கில அர சாட்சிக்கு முன்னே பாளையமாக இருந்தது; விஜய நகர அரசாட்சி பரவியபோது, மிக்க வீரரான முத்தைய நாயக்கருக்குச் சொந்தமாய் இருந்தது. அதற்கு வடக்கிலுள்ள தேவர்மலை அவருடைய முக்கியமான இருப்பிடம். அங்கே அவர் ஒரு விஷ்ணு ஆலயத்தைக் கட்டினார்.

ஆண்டிப்பட்டி:—இது கரூர் தாலூகாவின் தென்பாகத்தில் இருக்கிறது. நாட்டுக்கோட்டைப் பிரபு ஒருவர் இதைப் பழைய ஜமீன்தாரிடமிருந்து வாங்கினார்.

மருங்காபுரி:—இது குளித்தலை தாலூகாவில் சிறு குன்றுகள் மத்தியில் இருக்கிறது. இவ்வூர்

கோவில்களுக்குப் பாளையக்காரர்கள் பல தானங்கள் கொடுத்திருக்கிறார்கள். தானசாசனங்கள் செப்புப் பட்டையத்தில் எழுதப்பட்டுள்ளன.

காட்டுப்புத்தூர்:—இது முசிரிக்கு வடமேற்கில் பதினாறு மைல் தூரத்தில் இருக்கிறது. இது ஆங்கில அரசாட்சி தொடங்கியபின் உண்டானது. இப்பொழுது இதைச் சிறு பாகங்களாகப் பிரித்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கே ஜமீன்தார் ஆதரவில் ஒரு உயர்தரப் பாடசாலை உண்டு.

துறையூர்:—இதுவும் முசிரிக்கு வடக்கே பதினெட்டு மைல் தூரத்தில் உள்ள ஒரு ஜமீன். துரோபதை அம்மன் கோவில் ஒன்று இவ்வூரில் இருக்கிறது. இங்கே சிவப்பிரகாச ஸ்வாமி மடம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. இது தென்னாட்டிலுள்ள வீரசைவ மடங்களில் ஒன்று.

உடையார்பாளையம்:—இது உடையார்பாளையம் தாலூகாவிலுள்ள ஒரு ஜமீன். இதுவும் ஆங்கில அரசாட்சி தொடங்குமுன் உண்டான பாளையம். இந்தப் பாளையக்காரர்களும் போரில் பேர் பெற்றவர்கள். இவ்வூரில் ஒரு சிவன் கோவிலும் காண்டீப தீர்த்தம் என்ற ஒரு குளமும் இருக்கின்றன.

அரியலூர்:—இதுவும் உடையார்பாளையம் தாலூகாவிலுள்ள ஒரு ஜமீன். அரியலூரில், பாளையக்காரர் ஒரு காலத்தில் அரிய வீரச் செயல்களைப்

புரிந்தனர். இது சிறந்த வியாபாரஸ்தலம். இங்கே ஒரு பெரிய சந்தை கூடும்.

## ஜில்லா சரித்திரம்

திரிசிரபுரம் இந்த ஜில்லாவின் முக்கியப்பட்டணம். திரிசிரபுரம் என்பது இப்பொழுது திருச்சிராப்பள்ளி என்றும் திருச்சினுப்பள்ளி என்றும் வழங்குகின்றது. பல ஆயிரம் வருஷங்களுக்கு முன் இந்த ஜில்லாவைச் சோழ அரசர்கள் ஆண்டு வந்தார்கள். திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்கள் சேர்ந்து சோழநாடு என்ற பெயரால் முற்காலத்தில் வழங்கிற்று. நெடுங்காலமாக இந்த ஜில்லா நாகரீகத்தால் சிறந்ததாகும். சோழ அரசர்கள் ஜனங்களுக்கு அநேக நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். சாலைகளும், பல கோவில்களும், நீர்ப்பாய்ச்சலுக்கு வேண்டிய அணைக்கட்டுகளும், கால்வாய்களும் சோழ அரசர்களால் ஏற்படுத்தப்பட்டன.

5-வது நூற்றாண்டில் காஞ்சிபுரத்தில் ஆண்டு வந்த பல்லவ அரசர்களின் அதிகாரத்தின் கீழ் சோழநாடு உட்பட்டது. பல்லவர்கள் தான் முதன் முதலில் கருங்கற் கட்டிடங்களைத் தென்னிந்தியாவில் கட்டினார்கள். தாயுமானவர் மலையில், பல்லவர்கள் பாறையிற்குடைந்த குகை ஒன்று இருக்கி

றது. மறுபடியும் சோழர்கள் பல்லவர்களை வென்று தாமே அரசர்கள் ஆயினர்.

14-வது நூற்றுண்டில் மதுரையில் ஆண்டு வந்த நாயக்க மன்னர்கள் இந்த ஜில்லாவையும் கைப்பற்றினுர்கள். நாயக்கர் அரசாட்சியில் பல கட்டிடங்கள் கட்டப்பட்டன. திருச்சி மலைக்கோவிலும் புதுப்பித்துக் கட்டப்பட்டது. ஸ்ரீரங்கம் கோவிலிலும் பல திருப்பணிகள் செய்யப்பட்டன. சாலைகளில் திருட்டுப் பயம் இல்லாமல் பாதுகாப்புகளைச் செய்தார்கள். நாயக்கர் குலத்தைச் சேர்ந்த இராணி மங்கம்மாள் காலத்தில் திருச்சியில் ஒரு அழகிய அரண்மனை கட்டப்பட்டது. இப்பொழுது தாலூகா கச்சேரி முதலியன அக்கட்டிடத்தில் இருக்கின்றன. மங்கம்மாளின் கொலுமண்டபம் இப்போது "டவுன் ஹால்" என்னும் பெயரால் வழங்குகிறது.

18-வது நூற்றுண்டின் இடையில் இந்த ஜில்லா ஆற்காடு நவாபின் அதிகாரத்தின் கீழ் உட்பட்டது. சந்தாசாகிப் என்பவன் ஆற்காடு நவாபைக் கொன்றுவிட்டுத் தானே நவாப் எனச் சிம்மாசனம் ஏறினன். பழைய ஆற்காடு நவாபின் குமாரனுகிய மகம்மதாலி திருச்சிராப்பள்ளிக்கு ஓடிவந்துவிட்டான். இங்கே இருவர்களுக்கும் போர் நடந்தது. பிரஞ்சுக்காரர் சந்தாசாகிப்புக்கு உதவி செய்யவே, ஆங்கிலேயர் மகம்மதாலிக்கு உதவி

செய்தனர். ஆங்கிலேயர் தென்னிந்தியாவில் பிரஞ்சுக்காரர் பலத்தை ஒடுக்கி மகம்மதாலியை ஆற்காட்டு நவாப்பாக்கினர். அவர் பல பள்ளிவாசல்களைக் கட்டினர். அவைகளுள் நத்தர்சாபள்ளிவாசல் மிகவும் முக்கியமானது.

1801-ம் வருஷத்தில் இந்த ஜில்லா ஆங்கிலேயர்வசம் வந்தது. நவாப்பின் அரசகுலத்தைச் சேர்ந்தவர்களுக்கு நம் அரசாங்கத்தார் உபகாரச் சம்பளம் அளிக்கிறார்கள். ஆங்கில அரசாட்சியில் நாம் பல நன்மைகளை மென்மேலும் அடைந்து வருகிறோம்.

---

## அரசாட்சி

நாம் வசிக்கும் இந்த தேசத்துக்கு இந்தியா என்று பெயர். இந்தத் தேசத்திற்கு அரசர் ஜார்ஜ் மன்னர்.

இப்போது இந்தியாவில் அநேக சிற்றரசர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாரும் நம் ஜார்ஜ்மன்னரின் அதிகாரத்திற்கு அடங்கி நடப்பவர்கள். ஆகையால் ஜார்ஜ் மன்னரே இந்தியாவுக்குச் சக்கரவர்த்தி ஆவார்.

ஜார்ஜ் மன்னர் இங்கிலாந்து தேசத்திலுள்ள லண்டன் நகரத்தில் வசிக்கிறார். இவர் இந்தியாவை ஆளுகை செய்ய ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறை ஒரு ஆங்கிலேய பிரபுவை இங்கே அனுப்புகிறார். அவருக்கு வைஸ்ராய் என்று பெயர்.

அரசாட்சி நன்ருய் நடைபெறும் பொருட்டு அரசாங்கத்தார் இந்தியாவைப் பல இராஜதானி களாகப் பிரித்திருக்கிருர்கள். அவைகளுள் நம் சென்னை இராஜதானியும் ஒன்ருகும். இந்த இரா



ஜதானியை நமது துரைத்தனத்தார் இருபத்தாறு பிரிவுகளாகப் பிரித்திருக்கின்றனர். அப்பிரிவுக ளுக்கு ஜில்லாக்கள் என்று பெயர். அவைகளில் திருச்சிராப்பள்ளி ஜில்லா ஒன்று.

இராஜதானிகளின் அதிகாரிகளுக்குக் கவர்னர்கள் என்று பெயர். ஜில்லாக்களின் அதிகாரி களுக்குக் கலெக்டர்கள் என்று பெயர். கவர்னர்கள் வைஸ்ராய்க்கு அடங்கி நடப்பவர்கள். கலெக்டர் கள் கவர்னர்களுக்கு உட்பட்டவர்கள்.

அரசாங்கத்தார் நமது ஜில்லாவை ஏழு சிறு பகுதிகளாகப் பகுத்திருக்கின்றனர். ஒவ்வொரு பகுதிக்கும் தாலூகா என்று பெயர். ஒவ்வொரு

தாலுகாவிலும் தாசில்தார் என்னும் ஒரு அதிகாரி இருக்கிறார். தாலுகா பெரிதாய் இருந்தால் அவருக்கு உதவியாக டிப்டி தாசில்தார் என்னும் ஒருவரை நியமிப்பார்கள். ஒவ்வொரு தாலுகாவிலும் பல கிராமங்கள் உண்டு. கிராமத்துக்குத் தலைவர் கிராம முனிசீப் எனப்படுவர். இவர்கள் கலெக்டருடைய அதிகாரத்துக்கு அடங்கி வேலை செய்ய வேண்டும். கலெக்டர் இந்த ஜில்லாவின் தலை நகரமாகிய திருச்சிராப்பள்ளியில் வசிக்கிறார். அவருக்கு உதவியாக ஒரு சப் கலெக்டரும் மூன்று டிப்டி கலெக்டர்களும் இருக்கிறார்கள்.

பிள்ளைகளே! அரசாங்கத்தார் நமக்கு பல நன்மைகளைச் செய்கிறார்கள். அவைகளை சற்றுக் கவனிப்போம். நமது உடலையும், பொருளையும், உயிரையும் காக்கின்றனர். அங்ஙனம் காப்பதற்குப் போலீசாரை நமது ஜில்லாவில் நியமித்து இருக்கிறார்கள்.

நமக்குள் உடல், பொருள், உயிர் காரணமாக வழக்குகள் நேர்ந்தால் அவைகளைத் தீர்க்க நியாயஸ்தலங்களையும் நியாயாதிபதிகளையும் நமது ஜில்லாவில் அமைத்து உள்ளார்கள்.

வெகுதூரத்தில் இருக்கிற நமது உறவினர், நண்பர் முதலியவர்களோடு சமாசாரப் போக்கு வரவு சுலபமாய் அறிய தபால், தந்தி ஆபீசுகளை ஜில்லா முழுவதும் ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

நமது ஜில்லாவிலுள்ள வயல்களுக்குத் தண்ணீர் ஒழுங்காகப் பாய வாய்க்கால்களையும், ஏரிகளையும் வெட்டி இருக்கிறார்கள்.

நமது ஜில்லாவில் பஞ்சம் வருமாயின் அதிக தூரத்தில் இருந்து உணவுப் பொருள்கள் சீக்கிரம் கிடைக்க, புகைவண்டி மார்க்கத்தையும் அமைத்துள்ளார்கள்.

ஏழை மக்களுக்கு நோய் உண்டாகுமானால், அதனை நிவர்த்திக்கப் பல வைத்திய சாலைகளை ஜில்லாமுழுவதும் ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

அந்நியர் படை எடுத்து நுழையாமலிருக்க, சேனைகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

நமது ஜில்லாவில் பிள்ளைகள் கல்வியில் தேர்ச்சியடைய ஆங்காங்கு உள்ள கலாசாலைகளுக்கும், ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கும் பொருள் உதவி புரிந்துவருகிறார்கள்.


ஆகையால், நமக்கு அரசாங்கத்தார் எவ்வளவு நன்மைகளைச் செய்துவருகிறார்கள்! இந்தியாவின் முன்னேற்றத்தை விரும்பும் நம் ஜார்ஜ் சக்ரவர்த்தி நீடூழிவாழ்க. இவரது செங்கோல்தழைத்து ஓங்குக.

---

## திருச்சிராப்பள்ளி தாலூகா

கிழக்கில் தஞ்சாவூர் ஜில்லாவும், தெற்கில் புதுக்கோட்டை இராஜ்ஜியமும், மேற்கில் குளித்தலை

தாலூகாவும், வடக்கில் கொள்ளிடமும் இந்த தாலூகாவின் எல்லைகள் ஆகின்றன. இத்தாலூகாவில் ஜன நெருக்கம் அதிகம்; நன்செய்ப்பயிர் அதிகமாக விளைகிறது. காவிரியின் பள்ளத்தாக்குகளில் கொடிக்கால்கள் விசேஷமாய் இருக்கின்றன.



திருச்சி நகர்

திருச்சிராப்பள்ளி:—இது ஒரு பெரிய முனிசிபல் நகரம். இப்பெயர்கொண்ட ஜில்லாவிற்கும், தாலூகாவிற்கும் முக்கியப் பட்டணம். காவிரியாறு இந்நகரத்திற்கு வடக்கே ஓடுகிறது. உய்யக்கொண்டான் வாய்க்கால் நகரத்தின் மத்தியில் கிழக்கு நோக்கிச் செல்லுகிறது. பண்டைக்காலமுதல் திருச்சிராப்பள்ளி புகழ் உடையது. இந்துக்கள், மகமதியர்கள், கிறிஸ்தவர்கள் ஆகிய மூன்று மதத்

தார்களும் இந்நகரத்தில் வசிக்கிறார்கள். உயர் தரப் பாடசாலைகள் பல திருச்சியில் நடைபெறு கின்றன. வெளியூர்களிலிருந்து ஆயிரக்கணக்கான மாணுக்கர்கள் திருச்சியில் வந்து கல்வி கற்றுச் செல்லுகிறார்கள். இராஜாங்கத்தின் ஜில்லா அதி காரிகளுக்கும், தென்னிந்தியா ரெயில்வே கம்பெ னியைச் சேர்ந்த தலைமை உத்தியோகஸ்தர்களுக் கும் திருச்சிராப்பள்ளி முக்கிய இருப்பிடமாக இருக்கிறது. சர்க்காருடைய ஜில்லா ஆபீஸ்களும், தென்னிந்தியா கம்பெனியாரின் தலைமை ஆபீஸ் களும் இந்நகரத்தில் இருக்கின்றன. வியாபாரங் களும், கைத்தொழில்களும் இந்நகரத்தில் மிகுதி யாக நடைபெறுகின்றன.

பல கிராமங்களின் தொகுதியே திருச்சிராப் பள்ளி என்னும் முனிசிபல் நகரமாக இப்பொ ழுது வழங்கப்படுகிறது. அவற்றுள் கோட்டை, பாலக்கரை, கண்டோன்மெண்டு, புத்தூர், உறையூர் என்பன நகரத்தின் முக்கியமான பகுதிகள்.

திருச்சிக் கோட்டையில் ஒரு குன்று இருக்கி றது. அக்குன்றின் மேல் உள்ள தாயுமானவர் ஆல யம் மிகப் பழமையும், சிறப்பும் உடையது. ஒரு காலத்தில் ஒரு செட்டிப்பெண் பிள்ளை பெற்ற போது மலையின் மீது எழுந்தருளியுள்ள சிவபெரு மான் அச்செட்டிப் பெண்ணின்முன் அவளு டைய தாயுருக்கொண்டு தோன்றி, அவளுக்கு

மருத்துவம் பார்த்தார் என்பது புராணக் கதை. ஆகையால் தாயும்ஆனவர் என்ற பெயர் அவருக்கு ஏற்பட்டது. அம்மலைக்குத் தாயுமானவர் மலை என்ற பெயர் வழங்குகிறது. மலையின் உச்சியில் ஒரு பிள்ளையார் கோவில் இருக்கிறது. அதற்கு உச்சிப்பிள்ளையார் கோவில் என்று பெயர். மலையைச் சுற்றி அழகான வீதிகள் இருக்கின்றன. மலைக்கு மேற்குப்புறத்தில் ஒரு பெரிய தெப்பக் குளம் இருக்கிறது; அது மிகவும் அழகானது; விஸ்வநாத நாயக்கமன்னரால் உண்டாக்கப்பட்டது. தெப்பக்குளத்தை ஒட்டி கிழக்குப்பக்கத்தில் "க்ளைவ்ஸ் ஹவுஸ்" என்னும் மாளிகை ஒன்று இருக்கிறது. திருச்சிராப்பள்ளி முற்றுகைக் காலத்தில் ராபர்ட் க்ளைவ் என்னும் ஆங்கிலேய வீரர் தம்சேனையுடன் அக்கட்டிடத்தில் தங்கியிருந்தார். ஆகையால் அவருடைய பெயரே அக்கட்டிடத்திற்கும் ஏற்பட்டது. இப்போது கிளைவ்ஸ் ஹவுஸில் செயின்டு ஜோசப்ஸ் காலேஜைச் சேர்ந்த ஹாஸ்டல் இருக்கிறது. நகரத்தின் இப்பகுதியில் நாயக்கமன்னர்கள் காலத்தில் பலமான கோட்டையும் அகழிகளும் அமைக்கப்பட்டிருந்தன. அவை இப்போது இல்லை. மலைக்கோயிலைத் தவிர வேறு பல இந்துக்களது கோயில்களும் இருக்கின்றன. முகமதியர் மசூதிகளும் பல உண்டு. அவற்றுள் நத்தர்சா பள்ளிவாசல் மிகவும் முக்

கியமானது. கிறிஸ்தவர்களுள் ரோமன் கத்தோலியருக்கும் புராடெஸ்டெண்டாருக்கும் தனித் தனியே மாதாகோவில்கள் இருக்கின்றன. நாயக்க மன்னர்களின் அரண்மனையின் பகுதியில் தாலூகாக்கச்சேரி, டிரெயினிங் ஸ்கூல் முதலியவைகள் இருக்கின்றன. இப்போது "டவுன் ஹால்" என வழங்குகிற மங்கம்மாளின் கொலுமண்டபம் மிக அற்புதமான கட்டிடம். வெளியூர் ஜனங்கள் தங்குவதற்காக முனிசிபல் சத்திரம் ஒன்றும், சின்னையாப்பிள்ளை என்ற பிரபுவால் ஏற்படுத்தப்பட்ட சத்திரம் ஒன்றும் இருக்கின்றன. முக்கியமான காலேஜ்கள் திருச்சிக் கோட்டையில் அமைந்திருக்கின்றன. அவற்றுள் செயின்ட் ஜோசப்ஸ் காலேஜ் ஒன்ருகும். பிஷப் ஹீபர் காலேஜ் என்பதும் ஒன்று. இது முதலில் S. P. G. காலேஜ் என்ற பெயரால் வழங்கிவந்தது. நாஷனல் காலேஜ் என்பது ஒன்று. பல பிரபுக்களின் சங்க நிர்வாகத்தில் இக்கலாசாலை நடைபெறுகிறது. பெண்பாலாருக்கென ஹோலிகிராஸ் காலேஜ் நடைபெறுகிறது. இதுவும் செயின்ட் ஜோசப்ஸ் காலேஜைச்சேர்ந்த ரோமன் கத்தோலியரின் நிர்வாகத்தில் உள்ளது. இவை தவிர, சில ஹைஸ்கூல்களும், சில செகண்டரி ஸ்கூல்களும், அநேக ஆரம்பப் பாடசாலைகளும் இருக்கின்றன. திருச்சிக் கோட்டையின் மேற்குப்பாகத்தில் திருச்சிக் கோட்டை ரெயில்வே

ஸ்டேஷனும், கிழக்குப் பக்கத்தில் திருச்சி டவுன் ரெயில்வே ஸ்டேஷனும் இருக்கின்றன.

பாலக்கரை:—திருச்சிக் கோட்டையைச் சார்ந்த தென்பாகத்தில் உள்ள பகுதி பாலக்கரை. பாலக் கரையில் பெரிய மளிகை மண்டிகளும் தானி யக் கடைகளும் இருக்கின்றன. கோட்டைக்கும் பாலக்கரைக்கும் மத்தியில் மார்க்கட்டும், தரும வைத்தியசாலையும், ஒரு மணிக் கூண்டும் இருக் கின்றன. மார்க்கட்டு மணிக்கூண்டு 1873-ம் வரு ஷத்தில் கட்டப்பட்டது. பாலக்கரையிலும் ஒரு ரெயில்வே ஸ்டேஷன் உண்டு.

கண்டோன்மெண்டு:—திருச்சிராப்பள்ளி ரெ யில்வே ஜங்ஷனும், ரெயில்வே ஆபீஸ்களும், கலெக்டர் கச்சேரி முதலியனவும், ஐரோப்பியரும் மற்றப் பிரபுக்களும் வசிக்கத்தக்க சிறந்த பங்களாக் களும், ஒரு சிப்பாய் பட்டாளமும் கண்டோன் மெண்டில் இருக்கின்றன. மற்றும் சில ஐரோப்பி யப் பாடசாலைகளும், ரோமன் கத்தோலிக் மிஷி னைச்சேர்ந்த செயிண்ட் ஜோசப்ஸ் தொழிற் கல்விச் சாலையும், டிரெயினிங் ஸ்கூல்களும், பெண்பாலா ரின் ஹைஸ்கூலும் அங்கே இருக்கின்றன. ரெயில் வே ஜங்ஷன் என்பது எல்லாப் பக்கங்களிலிருந் தும்வருகிற இருப்புப்பாதைகள் சந்திக்கும் இடம்.


புத்தூர்:—புத்தூரில் ஜில்லாக்கோர்ட்டுகளும், ஜில்லா ரிஜிஸ்தரார் ஆபீசும், முனிசிபல் ஆபீசும்,

பிஷப் ஹீபர் காலேஜைச் சேர்ந்த ஒரு ஹைஸ்கூலும், புராடெஸ்டண்ட் சர்ச் ஒன்றும் இருக்கின்றன. குழுமாயி அம்மன் கோவில் இந்துக்களுக்கு மிகப் பிரசித்தமானது. மாசி மாதத்தில் குழுமாயிக்குத் திருவிழா நடைபெறும். புத்தூருக்கு வடக்கே கண்டோன்மெண்டும், தெற்கே உறையூரும் இருக்கின்றன.

உறையூர்:—இது திருச்சிராப்பள்ளிக் கோட்டைக்கு மேற்கே சுமார் இரண்டு மைல் தூரத்தில் இருக்கிறது. ஒரு காலத்தில் இவ்வூர் சோழஇராஜாக்களின் தலைநகராக விளங்கியது. நெசவுத் தொழில் செய்கிறவர்களும், கல் தச்சர்களும் உறையூரில் அதிகமாக வசிக்கிறார்கள்.

ஸ்ரீரங்கம்:—காவிரிக்கும், கொள்ளிடத்துக்கும் இடையில் உள்ள நடுக்கரையில் உள்ளது; இங்குள்ள ஸ்ரீரங்கநாதஸ்வாமி கோவில் மிகப் பழமையும் புராணச்சிறப்பும் உடையது. இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் திரளான ஜனங்கள் ஸ்ரீரங்கநாதரைத் தரிசிக்க ஆண்டு முழுவதும் யாத்திரையாக இங்கு வருகிறார்கள். கோவிலைச் சுற்றி ஏழு மதில்கள் இருக்கின்றன. வெளியில் நான்கு பிரகாரங்களின் மத்தியில் சிறந்த கோபுரங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. கோவிலுக்குள் அருமையான சிற்பவேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. நான்காவது பிரகாரத்தில் ஆயிரக்கால் மண்ட

பம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு எதிரிலுள்ள சேஷகிரிராவ் மண்டபம் சிறந்த சிற்ப வேலைகளால் செய்யப்பட்டது. மேனாட்டார்களும் ஸ்ரீரங்கம் கோவிலின் சிற்பவேலைகளைக் கண்டு



ஸ்ரீரங்கம்

வியப்பு அடைகிறார்கள். ஸ்ரீரங்கத்தில் ஒரு நகர பரிபாலன சபையும், ஒரு ஹைஸ்கூலும், முனிசிபல் ஆஸ்பத்திரியும், சப்ரிஜிஸ்தரார் ஆபீசும் இருக்கின்றன. ஸ்ரீரங்கத்தில் உள்ள ஸ்ரீரங்கநாதஸ்வாமி விக்கிரகம் விபீஷணனால் அவ்விடத்திற்குக் கொண்டுவரப்பட்டதென்று புராணக்கதை வழங்குகின்றது. இங்கு வைணவர்கள் ஏராளமாய் வசிக்கிறார்கள்.

திருவானைக்காவல்.—இது நடுக்கரையில் அரங்க நகருக்குக் கிழக்கே, சுமார் அரை மைல் தூரத்தில்

உள்ள சிவஸ்தலம். இது ஸ்ரீரங்கம் முனிசிபாலிடியைச் சேர்ந்தது. இங்குள்ள ஜம்புகேஸ்வரர் ஆலயம் மிகச் சிறப்புடையது. இந்தக் கோயில் பல நூறுவருஷங்களுக்கு முன் கோச்செங்கணுன் என்னும் சோழனுல் கட்டப்பட்டது. நாட்டுக்கோட்டை நகரத்தார் இப்பொழுது இக்கோயிலைப் புதுப்பித்திருக்கிருர்கள். வெகுகாலத்திற்கு முன் இவ்வூர் ஒரு சோலையாக இருந்ததென்றும், அப்போது இங்குள்ள சிவலிங்கத்தை ஒரு யானை தினமும் பூசித்து வந்ததென்றும் புராணக்கதை வழங்குகிறது. ஆகையால் திருவானைக்காவல் என்ற பெயர் உண்டாயிற்று. சிவலிங்கத்திற்குப் பின்னுல் ஒரு நாவல்மரம் வெகுகாலமாக இருக்கின்றது. நாவல் மரத்திற்கு ஜம்புவிருக்ஷம் என்ற ஒருபெயர் உண்டு. ஆகையால் ஜம்புகேஸ்வரர் என்ற பெயர் இச்சிவபெருமானுக்கு ஏற்பட்டது. சிவலிங்கத்தைச் சுற்றி எப்பொழுதும் தண்ணீர் ஊறிக் கொண்டே இருக்கும். தண்ணீருக்கு அப்பு என்று ஒரு பெயர். ஆகையால் இச்சிவலிங்கத்தை அப்புலிங்கம் என்றும் சொல்லுவார்கள். திருவானைக்காவலில் இரங்கூன் இராமனுதரெட்டியார் என்பவர் ஒரு பெரிய சத்திரம் கட்டியிருக்கிருர். ஏழைகள் பலரும் அச்சத்திரத்தில் தினம் இரண்டு வேளையும் உணவு அளிக்கப்படுகிருர்கள். பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் ஏழை மாணுக்கர்கள் அச்சத்திரத்தில் போஷிக்கப்படுகிருர்கள்.

பிராட்டியூர்:—இது திருச்சி நகருக்குத் தெற்கே இருக்கிறது. இங்கு ஒரு இரட்டைக் குன்று இருக்கிறது. அக்குன்றில், ஆண்டிக்கறுப்பன் ஸ்வாமி கோவில் ஒன்றுண்டு.

முத்தரச நல்லூர்:—இது திருச்சிக்கு மேற்கில் சுமார் இரண்டு மைல் தூரத்தில் உள்ளது. இங்கு ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் சண்டை செய்த இடம் இருக்கிறது.

பேட்டைவாய்த்தலை :—இதற்கு 'வெட்டு வாய்த்தலை' என்றும் பெயர் உண்டு. இது திருச்சிக்கு மேற்கில் சுமார் பதினைந்து மைல் தூரத்திலுள்ளது. இங்கு ஒரு ரெயில்வே ஸ்டேஷன் உண்டு. முற்காலத்தில் ஸ்ரீரங்கம் கோவிலில் இருந்த நகைகளை ஒரு திருடன் திருடிச்சென்றான். அவனை இந்தவிடத்தில் வெட்டினார்கள். ஆதலின் அது இப்பெயரினால் வழங்கப்படுகிறது. இங்கு மிகவும் விநோதமான ஒரு மதகு உண்டு. அது பார்க்கத் தகுந்தது. அதை இராணி மங்கம்மாள் கட்டினதாகச் சொல்லுகிறார்கள். இங்கு நல்ல பட்டு வஸ்திரங்கள் நெய்யப்படுகின்றன.

பிக்ஷாண்டார் கோவில்:—இது ஸ்ரீரங்கத்திற்குக் கிழக்கில் ஒரு மைல் தூரத்தில் கொள்ளிடக் கரையில் இருக்கிறது. இதை உத்தமர்கோவில் என்றும் சொல்லுவதுண்டு. இங்குள்ள கோவிலில் சிவன் பிரம்மா விஷ்ணு என்னும் மும்மூர்த்தி

களுக்கும் சன்னிதானங்கள் அமைத்திருக்கிறார்கள்.

திருப்பராய்த்துறை:—இது திருச்சிக்கு மேற்கில், சுமார் 11 மைல் தூரத்திலுள்ள ஒரு சிவஸ்தலம். இதற்குச் சமீபத்தில் காவிரி நதி இரண்டாகப் பிரிகிறது. முற்காலத்திலிருந்த சோழ அரசன் ஒருவன், ஒரு எறும்புப் புற்றின் மேல் பொற்குருவி ஒன்று அடிக்கடி வந்து உட்காருவதைக் கண்டான். கண்டவன், அப்புற்றை வெட்டிச் சோதித்தான். அப்பொழுது அதில் ஒரு சிவலிங்கம் தென்பட்டது: அதை வெட்டி எடுக்கும்போது அது சேதமடைந்து, அதிலிருந்து பால் வடிந்தது. ஆகையால் இதற்குத் திருப்பால்துறை என்னும் மற்றொரு பெயருமுண்டு. இங்குள்ள ஸ்வாமிக்குத் திருப்பராய்த்துறைநாதர் என்றும் அம்மனுக்கும்பொன்மயிலாம்பிகைஎன்றும்பெயர். இது பாடல் பெற்ற ஸ்தலம். ஐப்பசி மாதம் 18-ம் தேதி, சூரிய கிரணம் இந்த கோவிலிலுள்ள சிவலிங்கத்தின் மேல் விழுமாம். அக்காலத்தில் ஜனங்கள் ஏராளமாய் இங்கு வந்து ஸ்வாமி தரிசனம் செய்வார்கள்.

திருச்சேந்துறை:—இது திருச்சிக்கு மேற்கில் சுமார் 8 மைல் தூரத்திலுள்ள ஒரு சிவஸ்தலம். இங்குள்ள சிவாலயத்தில் பலாமரங்கள் விசேஷம். அவற்றின் பழத்திலுள்ள சுளைகளை ஸ்வாமிக்கு

நிவேதனம் செய்தபின் ஆற்றில் எறிந்து விடுவார்கள். அவைகளை யாராவது சாப்பிட்டால் வயிற்று வலி உண்டாகுமென்று சொல்லுகிறார்கள்.

திருவெறும்பியூர்:—இது திருச்சிக்குக் கிழக்கில் சுமார் ஐந்து மைல் தூரத்திலுள்ளது. இது பாடல் பெற்ற சிவஸ்தலம். இக்கோவிலிலுள்ள ஸ்வாமிக்கு எறும்பீசுவரர் என்றும் அம்பிகைக்கு நறுங்குழல் நாயகி என்றும் பெயர். இது திருநாவுக்கரசருடைய தேவாரம் பெற்றது. இக்கோவில் ஒரு குன்றின்மேல் உள்ளது. முற்காலத்திலிருந்த பல்லவ அரசர்கள் மலையைக் குடைந்து இதை வெகு அற்புதமாய்க் கட்டியிருக்கிறார்கள்.

உய்யக்கொண்டான்:—இது திருச்சிக்கு மேற்கில் சுமார் மூன்று மைல் தூரத்தில் இருக்கிறது. இங்கும் ஒரு குன்று இருக்கிறது. அக்குன்றின் மேல் ஒரு சிவன்கோவில் உண்டு.

இலுப்பூர்:—இது திருச்சிக்குத் தெற்கில் சுமார் இருபத்தாறு மைல் தூரத்தில் இருக்கிறது இங்கு விசேஷமாய் முகம்மதியர் குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு 'லப்பைகள்' என்று பெயர். அவர்கள் பெரும்பாலும் நெசவுத் தொழில் செய்கிறார்கள். இங்கு ஒரு விஷ்ணு கோவிலும், ஒருசிவன் கோவிலும் உண்டு. சிவன் கோவில் மண்டபத்தில் அற்புதமான சிற்பவேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

## குளித்தலைத் தாலூகா

இந்தத் தாலூகாவுக்கு, வடக்கில் காவிரி நதியும், தெற்கில் மதுரை ஜில்லாவும், மேற்கில் கரூர் தாலூகாவும், கிழக்கில் திருச்சி தாலூகாவும், புதுக்கோட்டை இராஜ்ஜியமும் எல்லைகளாக உள்ளன. இந்தத் தாலூகாவில் ஜனநெருக்கம் இல்லை. இதின் பெரும்பாகம் சமவெளியாய் இருக்கிறது. இந்தத் தாலூகாவில் 40 சதுரமைல் விஸ்தீரணமுடைய காடுகள் உண்டு. பூமி செம்மண்ணாய் இருப்பதால் சோளம், வரகு, கம்பு, எள்ளு முதலிய புன்செய்த் தானியங்கள் விளைகின்றன. சில இடங்களில் நெல்லும் பயிராகிறது. நெசவுத்தொழில் இங்கு முக்கியமாய் நடைபெறுகிறது.

குளித்தலை:—இது இந்தத் தாலூகாவின் முக்கியமான பட்டணம். இங்கு ஒரு ரயில்வே ஸ்டேஷனும், ஜில்லா போர்டு உயர்தரப் பாடசாலையும், லோக்கல்பண்டு வைத்தியசாலையும், தாசில்தார், முன்சீப், சப்ரிஜிஸ்தார் கச்சேரிகளும் தாலூகா ஆபீசும் இருக்கின்றன. இங்கு பட்டுக்கரைவேஷ்டிகளும், ஜரிகை வேஷ்டிகளும் நெசவு செய்கிறார்கள். குளித்தலைக்குச் சமீபத்தில் கடம்பர்கோவில் என்ற சிவஸ்தலம் உண்டு. இங்கு சுமார் எண்ணாயிரம் ஜனங்கள் வசிக்கிறார்கள்.

கடவூர்:—இது குளித்தலைத் தாலூகாவின் தென் மேற்கில் உள்ள ஒரு ஜமீன். இது ஒரு

பள்ளத்தாக்கில் இருக்கிறது. ஆதியில், இது மிக்க வீரரான முத்தைய நாய்க்கருக்குச் சொந்தமானது. இதற்கு வடக்கிலுள்ள தேவர்மலை இவருடைய முக்கியமான வாசஸ்தலம். இங்குள்ள ஸ்வாமிக்கு உக்கிரநரசிம்மமூர்த்தி என்று பெயர்.

மதுக்கரை:—இது குளித்தலைக்கு மேற்கில் சுமார் 12 மைல் தூரத்திலுள்ளது. இது ஒரு சிறிய கிராமம். இங்கிருக்கும் கோவிலுக்குச் செல்லாண்டியம்மன் கோவில் என்று பெயர். ஜனங்கள் ஆடிமாதத்தில் இக்கோவிலிலுள்ள அம்மனுக்குப் பிரார்த்தனை செலுத்துவார்கள். காவிரிநதியின் வெள்ளத்தால் அபாயம் நேரிடாதபடி இத்தேவி காக்கிறாள் என்பது இந்துக்கள் கொள்கை. இது சேர சோழ பாண்டிய அரசர்களுடைய இராஜ்ஜியங்கள் சந்திக்கும் இடமாயிருந்தது. ஆகையால், இதற்குக் 'கோட்டைக்கரை' என்றும் ஒரு பெயர் உண்டு. இந்த இடத்தில் காவிரிநதி வளைந்து கோணலாகச் செல்வதால் இது மிக்க அபாயமான விடம் என்பார்கள்.

மகாதானபுரம்:—இங்கு ஒரு இரெயில்வே ஸ்டேஷன் உண்டு. குளித்தலைக்கு மேற்கில் சுமார் எட்டு மைல் தூரத்தில் உள்ளது. இந்த ஊரை மைசூர் அரசர் ஒருவர், பிராமணர்களுக்குத் தானமாகக் கொடுத்தார். ஆகையால் இதற்கு மகாதானபுரம் என்று பெயர் உண்டாயிற்று.

இரத்தினகிரி:—இது குளித்தலைக்குத் தென் மேற்கில் 5 மைல் தூரத்திலுள்ளது. இங்கு ஒரு செங்குத்தான மலை உண்டு. அதற்கு இரத்தினகிரி என்று பெயர். அந்தப்பெயரே ஊருக்கும் ஆயிற்று. அது 1178 அடி உயரமுடையது. அதன் மேல் ஒரு சிவாலயம் உண்டு. ஸ்வாமிக்கு இரத்தினேஸ்வரர் என்றும், சொக்கர் என்றும், வாட்போக்கிநாதர் என்றும் பல பெயர்கள் உண்டு. இந்த மலைக்கு ஐயர்மலை, மாணிக்கமலை, வாட்போக்கி மலை, சிவாயமலை என்ற பல பெயர்கள் வழங்கி வருகின்றன. இக்கோவில் மிகவும் அழகானது. இம் மலையில் ஏறிச் செல்வது வெகு கஷ்டம். இங்கு குரங்குகள் அதிகமாய் உண்டு.

மணப்பாறை:—குளித்தலைக்குத் தெற்கில் 22 மைல் தூரத்தில் இந்த ஊர் இருக்கிறது. இங்கு ஒரு ரெயில்வே ஸ்டேஷன் உண்டு. இங்கு டிப்டி தாசில்தார் கச்சேரியும், சப் ரிஜிஸ்தரார் ஆபீசும் இருக்கின்றன. இங்கு வாரத்திற்கு ஒரு முறை புதன்கிழமை தோறும் பெரிய சந்தை கூடும். பல-வகையான தானியங்களும், புளியும், நல்ல மாடுகளும் இங்கே கிடைக்கும். இங்கு ஒரு வைத்திய சாலையும், மங்கம்மாள்சத்திரம் ஒன்றும் இருக்கின்றன.

மருங்காபுரி:—இது மணப்பாறைக்குத் தெற்கில் 34 மைல் தூரத்தில் உள்ளது. இப்பெயர்

கொண்ட ஜமீனுக்கு முக்கியமான ஸ்தலம். இது சிறு குன்றுகள் மத்தியில் அமைந்திருக்கிறது. இதன் சமீபத்தில் வெள்ளிமலை இருக்கிறது.

ஈங்கவரம்:—இது குளித்தலைக்குத் தென்கிழக்கில் 12 மைல் தூரத்தில் உள்ளது. இது ஒரு சிறு கிராமம். கிராம தேவதைக்குச் செல்லாண்டி அம்மன் என்று பெயர். அம்மன் விக்கிரகத்தில் தேள்களைப்போல் உருவங்களை மாலையாகப் போட்டிருக்கிறார்கள்.

ஆண்டவர் கோவில்:—இது மணப்பாறைக்குச் சமீபத்தில் இருக்கிறது. ஸ்ரீராம்பிரான் மாரீசன் மேல் அம்பு எய்தவிடம் இது என்கிறார்கள். இங்கு மாமுண்டி கோவில் ஒன்றுண்டு.

---

## கரூர் தாலூகா

கரூர் தாலூகாவின் வடக்கில் சேலம் ஜில்லாவும் காவிரி நதியும், கிழக்கில் குளித்தலை தாலூகாவும், தெற்கில் மதுரைஜில்லாவும், மேற்கில் கோயம்புத்தூர் ஜில்லாவும் எல்லைகளாக சூழ்ந்திருக்கின்றன. இதுவும் அதிக ஜன நெருக்கமில்லாத தாலூகா; பெரும்பாலும் சமவெளியாய் இருக்கிறது. பூமி செம்மண் தரையாய் இருப்பதால், நெல் அதிகமாக விளைவதில்லை. சோளம், கம்பு, தினை முதலிய தானியங்களும், புகையிலையும்

இங்கு அதிகமாய்ப் பயிரிடப்படுகின்றன. பருத்தியும் சில விடங்களில் பயிராகிறது. நெசவு வேலை முக்கியமான கைத்தொழில். கூடை முடைதல், பாய் பின்னல், பாத்திரங்கள் செய்தல், மரவேலை முதலிய தொழில்களும் நடைபெறுகின்றன. இதன் பக்கத்தில் செல்லும் அமராவதி நதி தெற்கிலிருந்து வடக்காக ஓடிக் காவிரியோடு கலக்கிறது.

கரூர்:—இது இந்தத் தாலூகாவின் முக்கியமான ஊர். இது திருச்சியிலிருந்து சுமார் 48 மைல் தூரத்திலுள்ளது. இங்கு ஒரு பெரிய ரெயில்வே ஸ்டேஷன் உண்டு. இது அமராவதி நதியின் கரையில் இருக்கிறது. பிரம்மதேவர் முதலில் சிருஷ்டித்தொழிலை இங்கு ஆரம்பித்ததனால் இதற்குக் கரூர் அல்லது கருஊர் என்று பெயர் வந்ததாகச் சொல்லுகிறார்கள். இக்காரணத்தினால் இதற்குப் பிரம்மபுரம் என்றும் ஒரு பெயர் வழங்கி வருகிறது. இந்திய சரித்திரத்தில் மிக்க பிரசித்தி பெற்றது. சோழ அரசர்களுடைய பழைய இராஜதானி. இது முன்னே கோயம்புத்தூர் ஜில்லாவோடு சேர்ந்திருந்தது.

கரூர் கொங்கு நாட்டின் சிவஸ்தலங்களில் ஒன்று. இங்குள்ள சிவன் கோவில் முக்கியமானது. இதிலிருக்கும் சிவலிங்கம் ஐந்தடி உயரமுடையது. அது மண்ணில் புதைந்து கிடந்தது. அதை ஒரு பசு கண்டுபிடித்ததால் இங்கிருக்

கும் ஸ்வாமிக்குப் பசுபதீஸ்வரர் என்றும் இந்த ஊருக்குத் திருவானிலை என்றும் பெயர்கள் உண்டாயின. இந்த ஒரு முனிசிபல் உயர்தரப் பாடசாலையும், டிவிஷனல் ஆபீசும், தாசில்தார், முனிசிப் கச்சேரிகளும், வைத்திய சாலைகளும், தாலூக்கா ஆபீசும், நகர பரிபாலன சபையும் உண்டு. பாதிரிமாருடைய தொழிற்சாலை ஒன்று இங்கே இருக்கிறது. இந்த பல சாலைகள் சந்திப்பதால் இது முக்கியமான வியாபாரஸ்தலம். இங்கு ஒரு பிரசித்தி பெற்ற சமாதியும் இருக்கிறது. அதற்குக் கருராார்சமாதி என்று பெயர். அது பசுபதீஸ்வரர் கோவிலுக்குள் இருக்கிறது. முகம்மதியப் பெரியார் சமாதி ஒன்றும் இவ்வூரிலிருக்கிறது.

ஆண்டிப்பட்டி:—இது ஒரு ஜமீன். இந்த ஜமீன் மிக்க பழமையானது. இதன் பழைய ஜமீன்தார் இதை விற்றபோது, சிதம்பரம் செட்டியார் என்னும் நாட்டுக்கோட்டைப் பிரபு இதை வாங்கினார். அவர் இறந்தபின் அவருடைய இரண்டாவது குமாரர் திவான் பகதூர் பெத்தாச்சி செட்டியாருக்குச் சொந்தமாயிற்று. இது கரூர் தாலூகாவின் தென்பாகத்தில் இருக்கிறது.

நெரூர்:—இது கரூருக்கு வடக்கே சுமார் 5 மைல் தூரத்தில் இருக்கிறது. இவ்வூரில் சதாசிவப் பிரம்மம் என்னும் பெரியாருடைய சமாதி மிகவும் பிரசித்தமானது. இவ்வூரில் சிவன் கோவிலும்

விஷ்ணு கோவிலும் உண்டு. ஊரைச் சுற்றி வெற்றிலைத் தோட்டங்கள் உண்டு.

பள்ளப்பட்டி:—இது ஒரு சிறிய ஊர். இங்கு லப்பைகள் குடியிருக்கிறார்கள். ஒரு காலத்தில் இங்கு அதிக வியாபாரம் நடந்ததாகத் தெரிகிறது. இங்கு திங்கட்கிழமை தோறும் சந்தை கூடுகிறது.

அரவக்குறிச்சி:—இது கரூருக்குத் தென் மேற்கில் சுமார் 18 மைல் தூரத்தில் உள்ளது. இது மிகப் பழமையானது என்று தெரிகிறது. இவ்வூரில் ஒரு கோயிலும், இடிந்துபோன கோட்டையின் அடையாளங்களும் இருக்கின்றன. இங்கு டிப்டிதாசில்தார் கச்சேரியும், ஒரு வைத்திய சாலையும் உண்டு.

தாந்தோணி:—இது கரூரிலிருந்து 1½மைல் தூரத்திலுள்ள ஒரு சிறிய கிராமம். இங்கு ஒரு சிறு குன்றும், அதில் ஒரு விஷ்ணு ஆலயமும் உண்டு. இங்கு மலையைக் குடைந்து கோவிலும், விக்கிரகமும் செய்யப்பட்டிருக்கின்றன. இதை கரூரிலிருந்த சதாசிவப்பிரம்மம் கட்டினார். இங்கு உபநயனம், விவாகம் முதலிய சுபகாரியங்கள் நடப்பது வழக்கம். இங்கு கற்சட்டிகள் விசேஷம்.

புகலூர்:—இது காவிரி நதிக்கரையிலுள்ள கிராமம். கரூரிலிருந்து 10 மைல் தூரத்தில் இருக்கிறது. இங்கு வாழைத்தோட்டங்கள் மிகுதியாக

இருக்கின்றன. இங்கிருந்து வாழைக்காய்கள் வெளி யூர்களுக்கு ஏற்றுமதி யாகிறது.

வெஞ்சாமர் கூடலூர்:—இது கொங்கு நாட்டுச் சிவஸ்தலங்களில் ஒன்று. இங்கு ஒரு சிவன் கோவில் இருக்கிறது. அதில் பல கல்வெட்டுச் சாசனங்கள் இருக்கின்றன.

---

## முசிரி தாலூகா

இது வடக்கில் சேலம் ஜில்லாவையும், கிழக்கில் பெரம்பலூர் லால்குடித் தாலூகாக்களையும், தெற்கில் குளித்தலைத்தாலூகாவையும், மேற்கில் சேலம் ஜில்லாவையும் எல்லைகளாய் உடையது. இதன் ஜனத்தொகை சுமார் 6000. இங்கு ஐயாறு, கரைபோட்டானறு என்னும் நதிகள் ஓடுகின்றன. காவிரியிலிருந்து வெட்டப்பட்ட பெரிய கால்வாய், இந்தத் தாலூகா வழியாய்ச் செல்லுகிறது. அது இராஜராஜ சோழரால் வெட்டப்பட்டது. இங்கு பல குளங்களும் கிணறுகளும் உண்டு. சோளம், கம்பு, கேழ்வரகு, துவரை, பருத்தி முதலியவை விளைபொருள்கள். இங்கு நெல்லும் விளைகிறது. நெசவுத்தொழில், கோரைப்பாய் பின்னுதல் கல் தச்சுவேலை வெண்கலப்பாத்திரம்செய்தல் முதலிய கைத்தொழில்கள் இங்கு நடைபெறுகின்றன.

முசிரி:—இது இந்தத் தாலூகாவின் முக்கிய மான ஊர்; காவிரியின் வடகரையில் உள்ளது

ஒவ்வொரு புதன் கிழமையிலும் இங்கே சந்தை கூடுகிறது. இராஜராஜ சோழன் வெட்டின பெரிய கால்வாய் இதன் சமீபத்தில் காவிரியிலிருந்து பிரிகிறது. இதன் ஜனத்தொகை சுமார் 6000. இங்கு தாசில்தார் கச்சேரியும், தாலூகா ஆபீசும், மாஜிஸ்டிரேட் கோர்ட்டும், ஜில்லாபோர்டு உயர்தரப் பாடசாலையும், வைத்திய சாலையும் இருக்கின்றன. முற்காலத்தில் இதற்கு மும்முடிச் சோழன்பேட்டை என்ற பெயர் வழங்கிற்று.

திருவீங்கோய்மலை:—இது முசிரிக்கு மேற்கில் 3 மைல் தூரத்தில் இருக்கிறது. இது பாடல் பெற்ற சிவஸ்தலம். இங்குள்ள கோவிலின் கதவு ஒருசமயம் மூடப்பட்டிருந்தது. அகஸ்தியர் இங்கு ஸ்வாமி தரிசனம் செய்யவந்தார். கதவு மூடியிருப்பதைக்கண்டு ஈயின் உருவம்கொண்டு, கதவைத் துளைத்து உள்ளே சென்று பூஜித்தார் என்று ஒரு கதை வழங்குகிறது. இங்குள்ள ஸ்வாமிக்கு மரகதாசலேஸ்வரர் என்றும் அம்மனுக்கு மரகதவல்லியம்மை என்றும் பெயர். இக்கோயிலிலுள்ள சிவலிங்கம் மிக்க பிரகாசமுடையது.

ஸ்ரீநிவாச நல்லூர்:—இது முசிரிக்கு மேற்கில் 10 மைல் தூரத்தில் இருக்கிறது. சோழ அரசர்களால் கட்டப்பட்ட கோவிலொன்று இங்கு பாழடைந்து இருக்கிறது; இக்கோவில் சிறந்த

வேலைப்பாடுள்ளது; பல கல்வெட்டுச் சாசனங்கள் இருக்கின்றன.

தோட்டியம் :—இது முசிரிக்கு மேற்கில் இருக்கிறது. இது ஒரு சிறு கிராமம். இங்கு முன்னே தொட்டியர்கள் இருந்தமையால் இந்தப் பெயர் உண்டாயிற்று. இந்தக் கிராமதேவதைக்கு காளிஅம்மன் என்று பெயர். பங்குனி மாதத்தில் காளிஅம்மன் திருவிழா மிகச் சிறப்பாய் நடக்கும். அப்போது காளிஅம்மனுக்கு ஆடு, கோழி, எருமைக்கடா முதலியவைகளையும் பலியிடுவார்கள்.

காட்டுப்புத்தூர்:—இது முசிரிக்கு வடமேற்கே 16 மைல் தூரத்தில் இருக்கிறது. இங்கு ஒரு ஜமீன் உண்டு. இங்கே ஜமீன்தார் ஆதரவில் ஒரு உயர்தரப் பாடசாலையும், லோக்கல் பண்டு வைத்தியசாலையும் உண்டு. இங்கு வாழை அதிகமாகப் பயிராகிறது.

துறையூர்:— இது முசிரிக்கு வடக்கே 18 மைல் தூரத்தில், கொல்லி மலைக்கும் பச்சை மலைக்கும் இடையிலுள்ள ஒரு ஜமீன். இது இந்தப் பெயருள்ள ஜமீனுக்கு முக்கியமான பட்டணம். வாரத்தில் ஒருமுறை இங்கு சந்தை கூடும். அதில் உயர்ந்த மாடுகள் விற்பனைக்குவரும். இங்கு சிவன் கோவிலும், விஷ்ணுகோவிலும் இருக்கின்றன. இவ்வூரில் ஒரு பெரிய ஏரி யிருக்கிறது. அதன் மத்தியில் மூன்றடுக்கு மெத்தையுள்ள ஒரு

வீடு இருக்கிறது. அதில் ஜமீன்தார் சில சமயங்க ளில் தங்குவதுண்டு. திரௌபதி அம்மன் கோவில் ஒன்று இவ்வூரில் இருக்கிறது. நெருப்பு மிதிக்கிற உற்சவம் இங்கு விசேஷமானது. பலர் வந்து பிரார்த்தனை செலுத்துவார்கள். இவ்வூருக்குச் சமீ பத்தில் ஒரு மலையிருக்கிறது. அதற்குப் பெருமாள் மலை என்று பெயர். அம்மலையில் பிரசன்ன வேங் கடாஜலபதி கோவில் இருக்கிறது.

அந்தப்பெருமாளே ஜமீன்தார் குடும்பத்திற்கு இஷ்ட தெய்வம். ஜமீன்தார் குடும்பம் மிக்க பிர சித்திபெற்றது. இங்கே ஒரு வீரசைவமடம் இருக் கிறது. அதற்குட்பட்ட பல மடங்கள் இந்த ஜில்லா விலும் தென் ஆற்காடு ஜில்லாவிலும் உள்ளன.

குணசேகரம்:—முசிரிக்குக் கிழக்கில் 10 மைல் தூரத்திலுள்ளது. குணசீலர் என்ற முனிவர் இங்கு வசித்தமையால் இதற்குக் குணசேகரம் என்ற பெயர் உண்டாயிற்று என்கிறார்கள். இங் குள்ள சீனிவாசப் பெருமாள் கோவில் மிக்க பிர சித்தி பெற்றது. இதைச் சின்னத்திருப்பதி என் றும் சொல்லுவார்கள்.

செட்டிகுளம்:—துறையூருக்குக் கிழக்கில் 14 மைல் தூரத்தில் இருக்கிறது. இங்குள்ள சிவன் கோவில் மிகச் சிறந்தது. ஸ்வாமிக்குத் தண்டாயுத பாணி என்று பெயர். இதைச் சின்னப்பழனி என்று சொல்வதும் உண்டு. தைப்பூசத்தன்றும்

பங்குனி உத்திரத்தன்றும் பல காவடிகள் இங்கு வரும். பிரார்த்தனைக்காரர்கள் பால், சர்க்கரை முதலியவைகளைக் காவடிகளில் கட்டிக் கொண்டு வந்து செலுத்துவார்கள்.

தாத்தையங்கார்பேட்டை:—இது ஒரு சிறிய கிராமம். இங்கு துப்பட்டிகள் நெய்யப்படுகின்றன.

---

## லால்குடி தாலூகா

இது நமது துரைத்தனத்தார் புதிதாகத் திருச்சிராப்பள்ளி தாலூகாவிலிருந்து பிரித்த தாலூகா. இதற்கு வடக்கில் பெரம்பலூர் தாலூகாவும், தெற்கில் கொள்ளிடமும், மேற்கில் முசிரி தாலூகாவும், கிழக்கில் உடையார்பாளையம் தாலூகாவும் எல்லைகளாக இருக்கின்றன. கொள்ளிடம் இதைத் திருச்சி தாலூகாவிலிருந்து பிரிக்கிறது. கொள்ளிடம், உப்பாறு, நந்தியாறு. முதலிய நதிகள் பாய்வதால் இது மிக்க நீர்வளம் பொருந்தியது. ஐயன்வாய்க்கால் பாசனத்தைப் பெறும் நன்செய் நிலங்கள் இத்தாலூகாவில் அதிகமாக இருக்கின்றன.

லால்குடி:—இது இந்தத் தாலூக்காவின் முக்கியமான பட்டணம். இங்கு ஒரு ரயில்வே ஸ்டேஷன் உண்டு. இவ்வூரில் ஒரு சிவன் கோவிலுண்டு. அதன் கோபுரம் சிவப்பாயிருப்பதால் இதற்கு லால்குடி என்ற பெயர் முகம்மதியரால் இடப்பட்டது. இதைத் திருத்தவத்துறை என்றும் சொல்லுவார்

கள். முற்காலத்தில் மழவன் என்ற பெயருள்ள ஒரு அரசன் இருந்தான். அவன் குஷ்டரோகி ஒருசமயம் அவன் வேட்டையாடச் சென்றபோது இங்குள்ள குளத்தில் ஸ்நானம் செய்தான். உடனே அவனுடைய குஷ்டரோகம் நீங்கியது. ஆகையால் லால்குடியும் அதன் சுற்றுப்புறமும் மழவநாடு என்ற பெயர் பெற்றன. இந்நோயுள்ளவர்கள் இக்குளத்தில் ஸ்நானம் செய்து வந்தால் அந்த நோய் நீங்கும் என்று சொல்லுகிறார்கள். இவ்வூரிலுள்ள சிவன் கோவில் மிகவும் பழமையானது. அதில் மூன்று பிராகாரங்கள் உண்டு. இங்கு பல உற்சவங்கள் நடக்கும். ஆருத்திரா தரிசனம் இங்கு விசேஷம். முற்காலத்தில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் சண்டை நடந்தபோது முதலில் பிரஞ்சுக்காரர் இதைப் பிடித்துக் கொண்டார்கள். உடனே ஆங்கிலேயர் இதை மீண்டும் கைப்பற்றிக் கொண்டார்கள். இங்கு வெற்றிலைக்கொடியும், வாழையும் அதிகமாய்ப் பயிராகின்றன. இவ்வூரில் ஜில்லாபோர்டு உயர்தரப் பாடசாலையும், வைத்தியசாலையும், தாலுகா ஆபீசும் இருக்கின்றன.

சமயபுரம்:—இது திருச்சிராப்பள்ளிக்கு வடக்கில் 8 மைல் தூரத்தில் சென்னைக்குச் செல்லும் சாலையில் இருக்கிறது. இது முற்காலத்தில் ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுகாரருக்கும் நடந்த சண்டை

யில் பிரசித்தி பெற்றது. இங்கு கோட்டையும் அரண் மனையும் இருந்த அடையாளங்கள் காணப்படு கின்றன. அவைகளை 'கஜனமேடு' என்பார்கள் இங்கு போஜநலத்தரசர் கட்டிய மாரியம்மன் கோவில் மிக்க பிரசித்தி பெற்றது. மாரியம்மன் விக்கிரகத் தை ஒரு செம்படவன் தந்தப் பல்லக்கில் வைத்து விஜயநகரத்திலிருந்து இங்கு கொண்டு வந்ததாக ஒரு கதை உண்டு. இக்கோவிலில் பங்குனி மாதத் தில் பத்து நாள் திருவிழா நடைபெறும். அப் பொழுது ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து அம்மனைத் தரிசிப்பார்கள். இங்கு ஒவ்வொரு சனிக் கிழமையும் சந்தை கூடும். மார்கழி மாதத்தில் பெரிய மாட்டுச் சந்தையும் கூடுகிறது. இவ்வூரில் பல சத்திரங்கள் உண்டு. இங்கு புடவைகள் நெய் கிறார்கள்.

திருப்பத்தூர்:—இது ஒரு சுப்பிரமணியர் ஸ்தலம். மிகச் சிறியகிராமம். சூரபத்மனைக் கொல் வதற்கு முருகக் கடவுள் இங்குதான் வேலாயுதத் தைப் பெற்றார் என்பது புராணக் கதை. இதற்குத் திருப்பட்டூர் என்றும் பெயர்.

திருவெள்ளறை:—இது சிறந்த விஷ்ணு ஸ்தலம். லால்குடிக்கு மேற்கில் 22 மைல் தூரத் தில் உள்ளது. வெண்மையான பாறையில் இந்தக் கோவில் அமைந்திருக்கிறது. ஸ்வாமிக்குப்

புண்டரீகாக்ஷர்என்றும் தேவிக்குப் பங்கயச்செல்வி நாச்சியார் என்றும் பெயர்.

திருப்பைஞ்ஞீலி:—முசிரிக்குக் கிழக்கில் 15 மைல் தூரத்தில் காவிரியின் வடகரையில் உள்ளது. இது சிறந்த சிவஸ்தலம். ஞீலி என்ற சொல்லுக்கு வாழை என்று பொருள். இங்குள்ள சிவன் கோவிலில் வாழைகள் உண்டாகும். அவ்வாழைகளின் பழத்தை ஸ்வாமிக்கு நிவேதனம் செய்த பின் எறிந்து விடுவார்கள். யாராவது அப்பழத்தைத் தின்றால் வயிற்று வலி உண்டாகுமாம். இங்கு எமனுக்கு ஒரு கோவிலுண்டு. அது பூமி மட்டத்துக்குக் கீழே இருக்கிறது. இங்குள்ள சிவன் கோவில் அப்பர், சுந்தரர், சம்பந்தர் என்னும் மூவராலும் பாடல்பெற்றது. ஸ்வாமிக்கு மாற்றறிவரதேசர் என்றும் அம்மனுக்கு பாலசவுந்தரி அம்மை என்றும் பெயர். இந்த ஸ்தலத்தில் சிவபெருமான் திருநாவுக்கரசருக்குக் கட்டுச் சாதமும் தண்ணீரும் கொடுத்தார் என்பது புராணக் கதை.

மண்ணச்ச நல்லூர்:—இது லால்குடியிலிருந்து 15 மைல் தூரத்தில் உள்ளது. இங்கு பலர் நெல்மிஷின்களை அமைத்திருக்கிறார்கள். இங்கு நல்ல வர்த்தகம் நடக்கிறது. வாரத்தில் ஒரு முறை சந்தை கூடும். ஆமணக்கெண்ணெய் இங்கு ஏராளமாய் அகப்படும்.

## பெரம்பலூர் தாலூகா

இந்தத் தாலூகா வடவெள்ளாற்றுக்குத் தெற்கிலுள்ளது. மேற்கில் முசிரி தாலூகாவும், கிழக்கில் உடையார்பாளையம் தாலூகாவும், தெற்கில் லால்குடி தாலூகாவும் எல்லைகளாக உள்ளன. இது காடடர்ந்த பிரதேசம்; சுமார் 86 மைல் விஸ்தீரணம் காடாய் இருக்கிறது. இங்கு ஜனத்தொகை குறைவு; மழை அதிகமாகப் பெய்கிறது; சோளம், கம்பு, வரகு, கேழ்வரகு, பருத்தி, அவுரி முதலியன இந்தத் தாலூகாவின் விளைபொருள்கள். கம்பளியும் சமுக்காளமும் இங்கு நெய்கிறார்கள். அழகான பித்தளைப் பாத்திரங்களும் செய்யப்படுகின்றன.

பெரம்பலூர்:—இது இத்தாலூகாவின் முக்கியமான பட்டணம். இங்கு ஒரு வைத்தியசாலையும், ஸெகண்டரி பாடசாலையும், தாலூகா ஆபீசும், துரைத்தனத்து உத்தியோகஸ்தர் கச்சேரிகளும் இருக்கின்றன.

ரஞ்சன்குடி:—இது பெரம்பலூருக்குக் கிழக்கில் 11 மைல் தூரத்திலிருக்கிறது. இவ்வூரில் ஆங்கிலேயர் பிரஞ்சுகாரரைத் தோற்கடித்தார்கள். இங்கு ஒரு பழைய கோட்டையிருக்கிறது. கம்பளங்களுக்கும், ஜரிகைச் சேலைகளுக்கும் இவ்வூர் பெயர் பெற்றது.

குரும்பலூர்:—இது பெரம்பலூருக்கு 4 மைல் தூரத்திலுள்ள ஒரு சிறு கிராமம். இங்குப் பித்த

ளைப் பாத்திரங்களும், தட்டுகளும் வெகு நன்ருய்ச் செய்கிருர்கள்.

ஊட்டத்தூர்:—பெரம்பலூருக்குத் தெற்கே 15 மைல் தூரத்தில் உள்ள ஒரு சிறிய கிராமம். கடலில் வசிக்கும் பிராணிகளின் எலும்பு, ஓடு முதலியவை இங்கே அகப்படுகின்றன. ஆகையால் முற்காலத்தில் இங்கே கடல் இருந்தது என்று சொல்லுகிருர்கள். இங்கு ஆங்கிலேயருக்கும், பிரஞ்சுக்காரருக்கும் முன் சண்டை நடந்தது. இங்கு ஒரு சிவஸ்தலம் இருக்கிறது. இவ்வூர் கிராமதேவதைக்குச் செல்லி அம்மன் என்று பெயர். பேய் பிடித்தவர்களை அந்தத் தேவதை அப்பேயை நீக்கிச் சுகப்படுத்துமாம்.

வாலிகண்டபுரம்:—இது பெரம்பலூருக்கு 8 மைல் தூரத்தில் இருக்கிறது. ஸ்ரீராமர் இலங்கைக்குச் சென்றபோது வாலியை இங்குச் சந்தித்தார். ஆகையால் இந்தப் பெயர் வந்தது. இங்கு ஒரு சிவன் கோவில் இடிந்து பாழாய்க்கிடக்கிறது.

லாடபுரம்:—இது பெரம்பலூருக்கு மேற்கில் 7 மைல் தூரத்தில் உள்ளது. பஞ்சபாண்டவர்கள் அஞ்ஞாதவாசம் செய்த காலத்தில் இங்கு மறைந்திருந்தார்கள். விராடபுரம் என்பது இவ்வூரின் பழைய பெயர்.

---

## உடையார் பாளையம் தாலூகா

இந்தத் தாலூகா திருச்சிஜில்லாவின் வடகிழக்கு மூலையில் இருக்கிறது. வடக்கில் தென் ஆற்காடு ஜில்லாவும், மேற்கில் பெரம்பலூர் லால்குடி தாலூகாக்களும், தெற்கிலும், கிழக்கிலும் தஞ்சாவூர் ஜில்லாவும் இதன் எல்லைகளாக உள்ளன. கொள்ளிடநதி இதன் தெற்கில் ஓடி, இதைத் தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து பிரிக்கிறது. இத்தாலூகாவில் பெரும்பாலும் மழையை நம்பித்தான் பயிர் செய்வார்கள். பூமி வறட்சியானது. ஆயினும் போதிய மழை பெய்கிறது. பயிரிடும் நிலங்கள் விசேஷமாயுண்டு. ஆங்காங்கு காடுகளும் இருக்கின்றன. நெல், வரகு, கேழ்வரகு, சோளம், கம்பு, முதலிய தானியங்களைப் பயிரிடுகிறார்கள்.

உடையார்பாளையம்:—இது ஒரு முக்கியமான ஜமீன்; இந்தப் பெயர் கொண்ட ஜமீனுக்கு முக்கியமான இடம். முற்காலத்தில் விஜய நகரத்தில் அரசு செலுத்தி வந்த அரசர் ஒருவரால், காஞ்சீபுரத்திலிருந்து பல வீரச் செயல்களைச் செய்த பாளையக்காரருக்குக் கொடுக்கப்பட்டது. ஜமீன்தாரின் அரண்மனை வெகு அழகானது. இங்கே ஒரு பெரிய குளம் உண்டு. அதற்குக் காண்டீப தீர்த்தம் என்று பெயர். உயர்ந்த ஜமுக்காளங்களும், ஜோடுகளும் இங்கே செய்யப்படுகின்றன. நெசவுத் தொழிலும் நடைபெறுகின்றது; ஜில்லா

போர்டு ஆதரவில் ஒரு ஸெகண்டரி பாடசாலை உண்டு.

ஜயங்கொண்ட சோழபுரம்:—இது இந்தத் தாலூகாவின் முக்கியமான ஊர். இங்கு வைத்திய சாலை, ஸப் மாஜிஸ்டிரேட் கச்சேரி, சத்திரம் முதலியவை உண்டு. இது ஒரு யூனியன் டவுன். நெசவுதான் இங்கு முக்கியமான தொழில். பித்தளைப் பாத்திரமும் செய்கிறார்கள். இங்கு இரண்டு ஜயின விக்கிரகங்கள் இருக்கின்றன. அவற்றில், ஒன்றைக் கிராமதேவதை யென்று இவ்வூரிலுள்ள ஜனங்கள் கொண்டாடுகிறார்கள். இங்கு பித்தளை விக்கிரகங்களும் செய்கிறார்கள்.

அரியலூர்:—இது ஒரு பெரிய ஜமீன். இப்பெயர் கொண்ட ஜமீனின் தலைநகரே அரியலூர். இது சிறந்த வியாபார ஸ்தலம். இங்கு ஒரு ரயில்வே ஸ்டேஷனும், டிப்டிகலெக்டர் கச்சேரியும், முனிசிப் கோர்ட்டும், லோக்கல் பண்டு வைத்திய சாலையும், தாலூகா ஆபீசும், பஞ்சாலைகளும், போர்டு ஹைஸ்கூலும் இருக்கின்றன. அரியலூர் சந்தை தென்னிந்தியாவிலுள்ள பெரிய சந்தைகளில் ஒன்று. இங்கிருந்து ஆடுகளைக் கொழும்புக்கு அனுப்புகிறார்கள். இங்கு பருத்தி அதிகமாய் விளைகிறது.

கங்கைகொண்ட சோழபுரம்:—இது ஜயங்கொண்ட சோழபுரத்துக்குக்கிழக்கே 6 மைல் தூர

த்திலுள்ளது; சுமார் நூறுவருஷகாலம் சோழ அரசர்களின் தலைநகராய் விளங்கினது. தஞ்சாவூரை இராஜதானியாகக் கொண்டு அரசு செலுத்திக் கொண்டிருந்த இராஜேந்திரன் என்னும் சோழ அரசன் கங்காநதி தீரம் வரையிலும் பலநாடுகளை ஜயித்தான். ஆகையால் அவனுக்குக் கங்கை கொண்ட சோழன் என்ற பெயர் உண்டாயிற்று. அவன் தானடைந்த வெற்றிகளை ஞாபகப்படுத்தும் படியாக இந்த ஊரைக் கட்டி அதற்கு இந்தப்பெயரைக் கொடுத்தான். அது அவனுடைய இராஜதானியாயிற்று. இங்குள்ள சிவன் கோவில் தஞ்சாவூரிலுள்ள கோவிலைப் போலவே இருக்கிறது. இந்தக் கோவிலிலும் ஒரு பெரிய நந்தி உண்டு. இங்கே சோழ அரசருடைய அரண்மனை இருந்ததென்பதைக் காட்டுவதற்குப் பல அடையாளங்கள் உண்டு. இங்கு ஒரு ஏரி பாழடைந்து இருக்கிறது. அதற்குப் பொன்னேரி என்று பெயர். குருவாளப்பர் கோவில் என்னும் கிராமம் இதற்குச் சமீபத்தில் உள்ளது. அங்கு ஒரு விஷ்ணுஸ்தலம் இருக்கிறது. ஆளவந்தார் என்னும் வைஷ்ணவர் அதைக் கட்டி, குருவாளப்பர் என்னும் ஒருவருக்கு கொடுத்ததாகச் சொல்லுகிறார்கள்.


திருமழபாடி:—இது ஜயங்கொண்ட சோழபுரத்திற்குத் தென் மேற்கில் 24 மைல் தூரத்தில் உள்ளது. கொள்ளிடத்தின் வடகரையில் இருக்

கிறது. இவ்வூரிலுள்ள சிவன்கோவிலின் சுவர்களில் சோழர், பாண்டியர் ஹொய்சலர் காலங்களில் எழுதப்பட்ட சாசனங்கள் இருக்கின்றன. இங்கு கொள்ளிடம் வடக்கு முகமாக ஓடுகிறது. இங்கு ஸ்நானம் பண்ணுவது மிகவும் விசேஷம்.

ஏளக்குறிச்சி:—இது ஜயங்கொண்ட சோழபுரத்துக்குத் தென் மேற்கில் 24 மைல் தூரத்தில் உள்ளது. இங்கு ஒரு மாதா கோவில் உண்டு. சித்திரை மாதத்தில் நடக்கும் திருவிழாவுக்கு ஏராளமான கிறிஸ்தவ ஜனங்கள் செல்லுவார்கள்.

79105

Printed in Madras at the B. N. Press, Mount Road, (P. O).



திருச்சிராப்பள்ளி ஜில்லா
மலைகள்
ஆறுகள்
ரயில் பாதை
வண்டிப்பாதை
அணைக்கட்டு
ஊர்கள்
சேலம் ஜில்லா
தென் ஆற்காடு ஜில்லா
தஞ்சாவூர் ஜில்லா
மதுரை ஜில்லா
கோயம்புத்தூர் ஜில்லா
புதுக்கோட்டை ராஜ்யம்
கரூர் தாலூகா
முசிறி தாலூகா
பெரம்பலூர் தாலூகா
உடையார்பாளையம் தாலூகா
குளித்தலை தாலூகா
திருச்சிராப்பள்ளி தாலூகா
கரூர்
முசிறி
துறையூர்
பெரம்பலூர்
அரியலூர்
மணப்பாறை
திருச்சிராப்பள்ளி
காவேரி நதி
வடவெள்ளாறு
கொள்ளிடம் நதி
78
78·30'
79
79·30
11

திருச்சிராப்பள்ளி E. R. ஹைஸ்கூல் தமிழாசிரியர்

## ம. பெரியசாமிப் பிள்ளை

| எழுதியவை. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| பூந்தமிழ் வாசகம் முதற் புத்தகம் | 0 | 2 | 6 |
| ,, ,, இரண்டாம் புத்தகம் | 0 | 3 | 0 |
| ,, ,, மூன்றாம் புத்தகம் | 0 | 4 | 0 |
| ,, ,, நான்காம் புத்தகம் | 0 | 5 | 0 |
| ,, ,, ஐந்தாம் புத்தகம் | 0 | 6 | 0 |
| S. S. L. C. தமிழ் இலக்கணம் | 0 | 12 | 0 |
| முதல், இரண்டு, மூன்றாம் பாரத் தமிழ் இலக்கணம் | 0 | 9 | 0 |
| ஐந்தாம் வகுப்புத் தமிழ் இலக்கணம் | 0 | 3 | 0 |

---

சென்னை தியாகராயர் கலாசாலைத் தமிழாசிரியர்

## மா. இராஜமாணிக்கம்

எழுதிய

| | | | |
|---|---|---|---|
| முடியுடை மூவேந்தர் | 0 | 12 | 0 |

---

திருச்சிராப்பள்ளி நேஷனல் ஹைஸ்கூல் தமிழாசிரியர்

## S. P. கந்தசாமி ஐயா

எழுதிய

| | | | |
|---|---|---|---|
| நவீன தமிழ் வாசகம் முதற் புத்தகம் | 0 | 2 | 6 |

---

## P. M. G. வெங்கட கிருஷ்ண முதலியார்

எழுதிய

| | | | |
|---|---|---|---|
| ஈசாப்பு நீதிக் கதைகள் | 0 | 3 | 0 |
| இளைஞர் நீதிக் கதைகள் | 0 | 4 | 0 |

---


# T. G. கோபால் பிள்ளை,

தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.